Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | சித்திரை - 27 | 10-05-2003 | சனிக்கிழமை | ஓசை 81

"சேரன் சுவையகம்"

கிளிநொச்சி.

கிளிநொச்சி மக்களின் நீண்ட கால எதிர்பார்ப்பினை நிறைவு செய்ய...

"சேரன் சுவையகம்"

15.05.2003 ஆம் நாள் "சேரன் சுவையகம்" தனது பணியை ஆரம்பிக்க உள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். (3195)

### உயர் பாதுகாப்பு வலயத்தில் மாற்றம் தொடர்பாக

# யாழ். இராணுவத் தளபதியின் யோசனைகளிலிருந்து சதீஸ் நம்பியாரின் அறிக்கை வேறுபடவில்லை

## போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் கருத்து

**உயர் பாதுகாப்பு வலயத்தை மாற்றியமைப்பது தொடர்பாக நம்பியாரின் அறிக்கையில் கூறப்பட்டிருப்பது போன்ற யோசனையையே யாழ். மாவட்ட இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கடந்த சனவரி முதலாம் திகதி முன்வைத்தார் என போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் பீற்றர் ஹொக்லண்ட் பி.பி.ஸி.க்குத் தெரிவித்தார்.**

லெப்.ஜெனரல் நம்பியாரின் அறிக்கை தொடர்பாக அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அமைப்பில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என பாதுகாப்பு வலயம் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட லெப்.ஜெனரல் சதீஸ் நம்பியார் தெரிவித்துள்ளார். இது குறித்து உங்கள் கருத்து என்ன என்ற கேள்விக்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் பீற்றர் ஹொக்லண்ட் பி.பி.ஸி.க்குத் தெரிவிக்கும்போது,

(08ஆம் பக்கம் பார்க்க)



சுவிஸ் பாராளுமன்றத்திற்கு முன்னால் புலிகளின் அரசியல் விவகாரக்குழு.

# உயர் பாதுகாப்பு வலயத்தை குறைப்பதற்கு புலிகளின் நிலைகள் அகற்றப்படவேண்டும்

## சதீஸ் நம்பியாரின் அறிக்கையில் தெரிவிப்பு

யாழ். குடாநாட்டின் அதியுயர் பாதுகாப்பு வலயங்களின் பாதுகாப்பைக் குறைக்க விடுதலைப்புலிகள் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் குறித்து முன்னாள் இந்திய இராணுவத் துணைத் தளபதி நம்பியார் சிறிலங்காப் பிரதமருக்கு கையளித்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அரச படையினரின் அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றும் எந்தவொரு நடவடிக்கையையும் விடுதலைப்புலிகளின் படைநிலைகளை அகற்றும் நடவடிக்கையுடன் பொருந்துவதாக அமைய வேண்டும் என அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச் செயற்பாடுகளை கண்காணிப்பதற்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு மேலதிகமாக சர்வதேச பொலிஸ் மற்றும் படைகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்களைக் கொண்ட அமைப்பொன்றை ஏற்படுத்த வேண்டும்.

இது தொடர்பாக சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது உடன்படிக்கை ஒன்று எட்டப்பட வேண்டும் என சதீஸ் நம்பியார் தெரிவித்துள்ளார். இது பற்றி அவர் தெரிவிக்கையில்,

பொதுமக்கள் அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற விடயத்தில் தீர்க்கமான கருத்து வெளிப்பா

(08ஆம் பக்கம் பார்க்க)



# பறந்து கொண்டிருந்த விமானத்தின் கதவு திறந்தது 160 பயணிகள் வெளியே வீசப்பட்டு மரணம்

மத்திய ஆபிரிக்க நாடான ஹொங்கோ சனநாயக குடியரசில் ஏற்பட்ட விநோதமான விமானவிபத்தில் குறைந்தது 160 பேர் கொல்லப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ரஷ்ய தயாரிப்பான மேற்படி விமானம் உள்நாட்டு பயணமாக தலைநகர் கிங்சாராறில் இருந்து புறப்பட்டுச்

(08ஆம் பக்கம் பார்க்க)

# நம்பியாரின் அறிக்கையை கதிர்காமர் பகிரங்கப்படுத்தினார்

சதீஸ் நம்பியாரின் அறிக்கையின் சில பிரதிகளை முன்னாள் வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் காதிர்காமர் பாராளுமன்றத்தில் பகிரங்கப்படுத்தியுள்ளார். இதனால் இராணுவ உயர் அதிகாரிகள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என செய்திகள் தெரிவிக்கின்றன. அவ்வாறான தகவல்க

(08ஆம் பக்கம் பார்க்க)

# வட - கிழக்கிற்கான நிதியைச் செயற்படுத்துவதில் தாமதத்திற்கு உலக வங்கி நடைமுறைகளே காரணம்

## சிறிலங்காப் பிரதமர் ரணில் அகாஷிக்கு விளக்கம்

வடக்கு - கிழக்கிற்கான நிதியை செயற்படுத்துவதில் ஏற்பட்ட தாமதத்திற்கு உலக வங்கியின் நடைமுறைகளே காரணம் எனவும் சிறிலங்கா அரசாங்கம் இதற்குப் பொறுப்பேற்க முடியாது எனவும் சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் விசேட தூதுவர் யசுகி அகாஷியிடம் புலிகள் முன்வைத்த விடயங்களுக்கு ஜப்பானிய விசேட தூதுவரிடம் விளக்கமளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். வட-கிழக்கிற்கான நிதியை செயற்படுத்துவதில் தாமதம் ஏற்படுவது குறித்து தனது பதிலை தெரிவித்துள்ள அவர் உலக வங்கியுடன் இருக்கும் நடைமுறைச் சிக்கல்கள் காரணமாகவே இத்தாமதம் ஏற்பட்டதாகக்கூறியுள்ளார். அத்துடன் இச் சிக்கல்கள் காரணமாகவே சிரானுக்கான நிதி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

### மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவின்

# சர்வதேச தரத்திற்கமைய பயிற்சி பெற்ற அணியினர் நாளை முதல் பணி ஆரம்பிப்பு

(அலுவலக செய்தியாளர்)

மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் சர்வதேச தரத்திலான விசேட பயிற்சி பெற்ற அணியினரின் பயிற்சி நிறைவு விழா இடம்பெற்றுள்ளது.

என். பி. ஏ. நிறுவனத்தினால் 60 பேர் கொண்ட நான்கு புதிய அணிகளுக்கான பயிற்சி நிறைவு விழா நேற்று முன்தினம் பிற்பகல் 4.00 மணியளவில் மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் பணிப்பாளர் தலைமையில் பயிற்சி முகாமில் இடம்பெற்ற இந்நிகழ்வில் என்.பி.ஏ. தொழில்நுட்ப ஆலோசகர்களான கான்ஸ், றிச்சட் மற்றும் மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் வெளிக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

(08ஆம் பக்கம் பார்க்க)



# அபிவிருத்தி லொத்தர் சபை சனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ்

(கொழும்பு)

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அபிவிருத்தி லொத்தர் சபையை சனாதிபதி தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளார்.

இது சம்பந்தமான அறிவித்தல் நேற்று முன்தினம் நள்ளிரவு வெளியிடப்பட்டதாக சனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

அபிவிருத்தி லொத்தர் சபை இதுவரை பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் விஞ்ஞானத் தொழில் நுட்ப அமைச்சின் கீழ் இயங்கிவந்தது.

## வரி விளம்பரம்

### விற்பனைக்குண்டு

மத்திய கிழக்கிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய T.V. மற்றும் CD PLAYER விற்பனைக்குண்டு. விபரங்கட்கு வே. சந்திரகுமார். மே/பா. வே. பரமநாதபிள்ளை, இல. 140, 5ஆம் பண்ணை, கனகபுரம், கிளிநொச்சி. (3196)

### தவறிவிட்டது

05.05.2003 அன்று தர்மலிங்கம் இந்திரகுமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரமும் முக்கியமான ஆவணங்கள் அடங்கிய கை பேக் ஒன்று புதுக்குடியிருப்புப் பகுதியில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் பணிமனையில் அல்லது புதுக்குடியிருப்பு மதி உணவகத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும் (3197)

### தவறிவிட்டது

குசலநாதன் -அபராஜிதன் ஆகிய எனது அடையாள அட்டை (இல. 811333484V) உடையார் கட்டிற்கும், புதுக்குடியிருப்புக்குமிடையில் தவறிவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுப்பவர்கள் உடையார் கட்டு மகாவித்தியாலயத்திற்கு முன்பாக, உடையார்கட்டு தெற்கு, ஐ.மகாதேவன் என்பவரிடம் ஒப் படைத்துதவவும். (3214)

## மலேசிய அரசின் விருப்பம்

சிறிலங்காவின் நகர அபிவிருத்தி வளர்ச்சியில் முதலீடு செய்ய மலேசிய அரசு விருப்பம் தெரிவித்துள்ளது. மலேசியாவின் மலாக்கா மாகாண முதலமைச்சரும் சிறிலங்காவின் மேற்குப் பிராந்திய அபிவிருத்தி அமைச்சு அதிகாரிகளுக்குமிடையே அண்மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாரதி அனுமதிப்பத்திரம் புதுப்பிக்க வவுனியா அரச அதிகாரிகள் மறுப்பு!

## ஏமாற்றத்துடன் வன்னி திரும்பும் சாரதிகள்

(கிளிநொச்சி)

வன்னிப் பிரதேசத்தில் உள்ளோர் சாரதி அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் நடவடிக்கையில் ஈடுபடுவதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இதுவரை காலமும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தோர் வவுனியா பிரதேச செயலகத்திலேயே இந்நடவடிக்கையினை மேற்கொண்டு வந்தனர்.

தற்போது இந்நடவடிக்கையில் அச் செயலகத்தினர் ஈடுபடுவதற்கு மறுப்பு தெரிவித்து வருகின்றனர். இதனால் இப்பிரதேசத்தில் இருந்து சாரதி அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்காகச் செல்வோர் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பி வருகின்றனர். இதில் அரச அலுவலகங்களில் கடமை புரியும் சாரதிகளும் அடங்குகின்றனர்.

எனவே சாரதி அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கு இம்மாவட்ட அரச அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்டவர்கள் கோருகின்றனர்.

# களுத்துறைச் சிறைச்சாலையில் 7 1/2 வருடங்கள் இருந்தவர் விடுதலை

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கடந்த ஏழரை வருடங்களாக களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் வர்த்தகர் ஒருவர் கடந்த செவ் வாயன்று விடுதலை செய்யப்பட் டுள்ளார். 1996இல் புறக்கோட்டையிலுள்ள வர்த்தக் நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்ட செல்லத்தம்பி தட்சணாமூர்த்தி என்பவரே விடுதலை செய்யப்பட்டவராவார்.

கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் இவர் மீதான குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மேல் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீஸ்கந்தராஜா நிராகரித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

வெலிக்கடை விசேட நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஸ மேற்படி நபரை விடுவித்தார். தடுத்து வைக்கப்பட்டிருந்தவர் சார்பில் சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஆஜரானார்.

# வங்கிகளில் அறவிடும் வட்டி ஒரு சதவீதத்தால் குறைப்பு

(கொழும்பு)

வங்கிகளில் அறவிடப்படும் வட்டி நேற்று முதல் ஒரு சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளதாக பிரதி நிதிஅமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி வருடாந்த அறிக்கையை நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் பொருளாதாரம் ஸ்திர நிலையில் இருந்ததாலேயே இந்த வட்டி வீதம் குறைக்கப்பட்டது. மத்திய வங்கியின் அறிக்கையை சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சிறிலங்கா போக்குவரத்து சபைக்கு மாதாந்தம் 200மில். ரூபா நட்டம்!

சிறிலங்கா போக்குவரத்துச் சபை மாதாந்தம் இருநூறு மில்லியன் ரூபா நட்டத்தில் இயங்கிவருவதாக சபையின் தலைவர் யூ.எல்.எம். பாறுக் தெரிவித்துள்ளார். எனினும் ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்கப்படவேண்டும் என்பதற்காக அரசாங்கத் திறைசேரியிலிருந்து நூற்று இருபது மில்லியன் ரூபா ஒதுக்கப்படுவதாக அவர் கூறினார். கம்பஹா, ஊவா மற்றும் றுஹுனு ஆகிய பிராந்திய சபைகள் மிகக் கூடுதலான நட்டத்தில் இயங்குகின்ற அதேவேளை யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களிலுள்ள ஐந்து சாலைகள் சிறந்த நிர்வகிப்புடன் முன்மாதிரியாக செயற்பட்டு வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடக் கோரிக்கை

வடக்கு கிழக்கு மாகாண அரசாங்க சேவையின் சிற்றூழியர்களை தட்டெழுத்தாளர் சேவை II ஆ. பிரிவிற்குப் பதவியுயர்த்துவதற்கான சிறிலங்கா பரீட்சைத் திணைக்களத்தினால் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 24,25ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட தட்டெழுத்தாளர் சங்கம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு கோரிக்கை அடங்கிய மகஜர் கையளித்துள்ளது. கடந்த இரு மாதங்களுக்கு முன்பு பரீட்சை ஆணையாளர் நாயகம் மூன்று வாரங்களுக்குள் வெளியிடுவதாக உறுதியளித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# அபூர்வ புத்தர் சிலை காலியில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

காலியில் மிக அபூர்வமான புத்தர் சிலை ஒன்றை கிராமவாசிகள் கண்டெடுத்துள்ளனர்.

காலியிலுள்ள அகழ்வாராய்ச்சி நிலையம் கருத்து வெளியிடுகையில் இச்சிலை தாய்லாந்தில் அல்லது சீனாவிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்டிருக்கலாம் எனத் தெரிவித்துள்ளனர்.

14 சென்ரிமீற்றர் உயரமுள்ள இச் சிலையில் முக்கியமான நிகழ்வுகள் ஓவியமாக வரையப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருத்தம்

நேற்றைய தினசரியின் 6ஆம் பக்கத்தில் இடம் பெற்ற பணி நிலை வெற்றிடம் தொடர்பான விளம்பரத்தின் முதல்பந்தியில் M.S.F. ஹொலண்ட் புதுக்குடியிருப்பு வைத்திய அதிகாரி "ஒருவருடன்" என்பது வைத்திய அதிகாரி "ஒரு வருடம்" எனதவறாக இடம் பெற்றுவிட்டது.என்பதை அறியத்தருகிறோம்

## சமுகம் தரவும்

கல்வி மாணிப்பட்ட நெறி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் அனுப்பப்படவுள்ளன. மேற்படி பயிற்சி நெறிக்கான விண்ணப்பப் படிவங்கள் மிக அவசரமாக அனுப்ப வேண்டியுள்ளதால் பாட நெறியினை மேற்கொள்ள விரும்புவோர்களை நாளை காலை 09:00 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்திற்கு சமூகம் தரும்படி கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் தெரிவித்துள்ளார். (பா)

# நோர். மத்தியஸ்தராக நடப்பதையிட்டு நாம் அதிர்ச்சி கொண்டுள்ளோம்

## பொ.ஐ.மு. ஊடகவியற் பேச்சாளர் சரத் அமுனுகம

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களில் நோர்வே அனுசரணையாளராக இருப்பதை நாம் எதிர்க்கவில்லை என்று பொ.ஐ.மு.ஊடகவியல் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆனால் நோர்வே மத்தியஸ்தராக நடந்து கொள்வதையிட்டு அதிர்ச்சி கொண்டுள்ளோம்.

இலங்கை கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகளை எமது கட்சியால் ஏற்றுக் கொள்ள முடியாது.

தற்போதைய அரசாங்கத்தின் மோசடியான, திறமையற்ற நடவடிக்கையினால் நிர்வாக குறைபாடுகள் ஏற்பட்டுள்ளன. அரசாங்க அமைச்சர்களின் நடவடிக்கைகளை பரிசீலனை செய்வதற்கு பிரதம மந்திரி ஒரு குழுவை நியமித்திருப்பது இதனை தெளிவாகப் புலப்படுத்துகின்றது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பி.க்கும் இடையிலான கூட்டணி அமைப்புக்கான பணிகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகின்றன.

மூன்று முக்கிய விடயங்கள் குறித்து இருகட்சிகளுக்கும் இடையே பேச்சுக்கள் நடைபெறுகின்றன. கூட்டணியை அமைப்பதற்கு அடிப்படைக் கொள்கை அமைப்புக்கென ஐந்து தரப்பு கொள்கைத்திட்டம் ஒன்று வகுக்கப்படுகின்றது.

இந்த கூட்டணியை அமைப்பதற்கு தேவையான செயல்முறைத் திட்டம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## முல்லை. மாவட்டத்தில்

# இடம்பெயர்ந்தோருக்கான விசேட கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவில் இடம் பெயர்ந்தோருக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை தண்ணீரூற்று, நீராவிப்பிட்டி, கொக்குத்தொடுவாய் பாடசாலைகளில் முறையே காலை 9 மணிக்கு கொக்குத்தொடுவாய் கிராம மக்களுக்கும் பகல் 11 மணிக்கு கொக்குளாய் கிராம மக்களுக்கும், பிற்பகல் 2 மணிக்கு தென்னமரவடி மக்களுக்கும், பிற்பகல் 4 மணிக்கு கருநாட்டுக்கேணி மக்களுக்கும் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் புதிய நிர்வாகத் தெரிவு மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது எனவும் மேற்குறிப்பிட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்களை உரிய நேரங் களுக்கு சமூகமளிக்கும்படி கடற் புலிகளின் அரசியல்துறையினர் தெரிவித்துள்ளனர். (பா)


## ஏலவிற்பனை

கிளி/மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பதிப்பகத்தின் பாவனையில் உள்ள [கட்டா பதிப்பு] இயந்திரம் ஏலத்தில் விற்கப்படவுள்ளது. ஏலவிற்பனை எதிர்வரும் 24-05-2003 சனிக்கிழமை காலை 10.00மணிக்கு நடைபெறவுள்ளதால். பார்வையிடுவோர் அதற்கு முன்பாக அலுவலக நாட்களில் பார்வையிடலாம் என்பதை அறியத்தருகின்றேன்.

மாவட்ட செயலாளர்

சி.க.கூ.சமாசம், கிளிநொச்சி.

(3199)


# புதைகுழியிலிருந்து எடுக்கப்பட்ட சடலங்கள் கழுத்து வெட்டப்பட்டே காணப்பட்டன

## மிருசுவில் படுகொலை வழக்கில் சாட்சியம்

மிருசுவில் பகுதி புதைகுழியில் இருந்து தோண்டி எடுக்கப்பட்ட எட்டு சடலங்களும் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் காணப்பட்டன சில சடலங்கள் கைகள் பின்பக்கமாக கட்டப்பட்டிருந்தன - இவ்வாறு மிருசுவில் படுகொலை வழக்கில் சாட்சியமளித்த சட்ட மருத்துவ அதிகாரி டாக்டர் சின்னத்துரை கதிரவேற்பிள்ளை தெரிவித்தார்.

மிருசுவில் படுகொலை வழக்கு மேல் நீதிமன்ற நீதிபதி எவ்.ஜெ. இமாம் தலைமையிலான நீதிபதிகள் குழு முன்னிலையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற போது அவர் மேலும் தெரிவிக்கையில்.

மூன்று ஊழியர்கள் சகிதம் நீதவானுடன் நான் 25ம் திகதி மிருசுவிலுக்கு சென்றேன் இரண்டு அடி ஆழத்திற்கு நிலத்தை தோண்டிய போது மனிதனொருவரின் முழங்கை தெரிந்தது குழியோரமாக ஒருவரின் கால் தென்பட்டது. தொடர்ந்து தோண்டியபோது முழங்கை தோன்பட்ட மனிதனின் சடலம் மீட்கப்பட்டது. அந்த சடலத்தின் இடுப்புக்கு கீழ் சாறியொன்று சுற்றப்பட்டிருந்தது கழுத்தில் வெட்டுக் காயம் இருந்தது.

தொடர்ந்து தோண்டிய போது கைகளை பின் பக்கமாக கட்டிய நிலையில் மற்றொரு சடலம் மீட்கப்பட்டது. இந்த சடலத்தின் கழுத்திலும் வெட்டுக்காயமிருந்தது. வில்வராசா பிரதீபனின் சடலம் என அடையாளம் காணப்பட்டது.

மூன்றாவதாக காற்சட்டை அணிந்திருந்த நிலையில் சின்னையா வில்வராசாவின் சடலம் மீட்கப்பட்டது. அதன் கழுத்தில் வெட்டுக் காயம் காணப்பட்டது.

நான்காவதாக ஒரு கைய் இல்லாத, கழுத்தில் வெட்டுக் காயத்துடன் கூடிய ரவிவர்மனின் சடலம் அடையாளம் காணப்பட்டது. சடலத்தில் காற்சட்டை மட்டுமே இருந்தது.

அடுத்ததாக உள்ளாடையுடன் நடேசு ஜெயச்சந்திரனின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. அதன் கழுத்திலும் வெட்டுக்காயம் இருந்தது.

முகம் சாரமொன்றினால் கட்டப்பட்டு, நீல நிற சாரம் அணிந்த நிலையில் கதிரன் ஞானச்சந்திரனின் சடலம் மீட்கப்பட்டது. சடலம் பின் பக்கமாக கட்டப்பட்ட நிலையிலும் கழுத்து வெட்டப்பட்ட நிலையிலும் காணப்பட்டது. கடைசியாக 5-7 வயதுக் கிடைப்பட்ட சிறுவனின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. கழுத்தில் வெட்டுக் காயம் இருந்தது. உடம்பில் உடை எதுவும் இருக்கவில்லை. வில்வராசா பிரசாத்தின் சடலமென அடையாளம் காணப்பட்டது என்றார்.

# தீவிரவாதத்தை எதிர்த்துப் போராட அமெரிக்க, இஸ்ரேல், இந்திய கூட்டுத் தேவை

## - இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் தெரிவிப்பு

**தீவிரவாதத்தை எதிர்த்துப் போராட இந்தியா, அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகள் கூட்டணி ஒன்றை உருவாக்க வேண்டும் என்று இந்தியத் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் விஜயசிமித்ரா கேட்டுக் கொண்டுள்ளார். வாஷிங்டனில் நிகழ்ச்சி ஒன்றில் பேசியபோதே அவர் இவ்வாறு கூறினார்.**

தீவிரவாதத்தை தடுப்பதற்காக அடிப்படைக் காரணங்களைக் கண்டுபிடித்து அதை வேரோடு அறுக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

2ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவின் உலக வர்த்தக நிறுவனங்கள் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல்,தீவிரவாதம் பற்றிய விழிப்புணர்வை உலக நாடுகளிடையே ஏற்படுத்தியது என்றும் அன்றைய நாளிலிருந்து தீவிரவாதம் என்பது தோன்றவில்லை என்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் விஜய சிமித்திர கூறியுள்ளார்.

இதேவேளை எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை பாகிஸ்தான் நிறுத்தியுள்ளதா என்பதை அமெரிக்க நாடாளுமன்றத்தில் தெரிவிக்க வேண்டும் என பாகிஸ்தான் அரசை வலியுறுத்தும் சட்டத்திருத்தம் அமெரிக்க நாடாளுமன்றத்தில் பிரதிநிதிகள் சபையில் கொண்டு வரப்பட்டுள்ளது.

அதன் படி பாகிஸ்தான் எல்லைதாண்டிய பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தியுள்ளதா? தீவிரவாதிகள் முகாம்களை மூடியுள்ளதா? என்பதை நாடாளுமன்றத்துக்கும் அமெரிக்க மக்களுக்கும் விசாரித்துத் தெரிவிக்க வேண்டுமென்று அச்சட்டத்திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் இத்தகைய சட்டத்திருத்தம் கொண்டுவரப்படுவது இதுவே முதல் தடவை ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.



காஸாப் பகுதியில் கடந்த புதன்கிழமை இஸ்ரேலியப் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான 18 மாதக் குழந்தையின் இறுதிச் சடங்கு. இக்குழந்தை அகதி முகாமிலுள்ள தனது வீட்டுக்கு வெளியே விளையாடிக் கொண்டிருந்த போது தலையில் துப்பாக்கிக் குண்டு நுழைந்தது.

## அணு ஆயுதங்கள் குறித்த பாக். இன் யோசனை இந்தியாவால் நிராகரிப்பு

தெற்காசியாவில் அணு ஆயுதங்களை அகற்ற வேண்டுமென பாகிஸ்தான் கூறிய யோசனையை வாஜ்பாய் நிராகரித்துள்ளார்.

இதற்கு எதிராக எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க மறைமுகப் போர் இணைக்க ஒப்பந்தம் செய்துகொள்ளலாம் எனக் கூறியுள்ளார்.

பாகிஸ்தானின் அணு ஆயுதத் திட்டம் இந்தியாவை மையமாகக்கொண்டது. ஆனால் இந்தியாவின் அணு ஆயுதத் திட்டமோ அவ்வாறு இல்லை எனக் கூறியுள்ளார். இந்தியா எந்தவொரு நாட்டின் மீதும் அணு ஆயுதங்களை முதலில் பயன்படுத்தாது என திட்டவட்டமாகக் கூறியுள்ளது. பாகிஸ்தான் இதுவரை இவ்வாறு கூறவில்லை. இது இவ்வாறிருக்க போர் விலக்க ஒப்பந்தம் என பாகிஸ்தான் கூறுவதில் என்ன அர்த்தம் உள்ளது என வினாவிய வாஜ்பாய் உண்மையில் மறைமுகப் போர் விலக்க ஒப்பந்தம் தான் இப்போது தேவையென கூறியுள்ளார்.

அர்த்தமுள்ள பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு பாகிஸ்தான் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை முடித்து பயங்கரவாதக் கட்டமைப்புக்களை நீக்கிவிட வேண்டும் என பிரதமர் கூறியுள்ளார்.

இப்புதிய சமாதான முன்முயற்சியை அரசு மிகுந்த கவனத்துடன் செயற்படுத்தும் எனவும் அவர் கூறியுள்ளார்.

## அமெரி. வெளியுறவுத் துணை அமைச்சர் இந்தியத் தலைவர்களுடன் சந்திப்பு

இந்தியா வந்துள்ள அமெரிக்க வெளியுறவுத்துறை துணை அமைச்சர் றிச்சட் ஆர்மிரேச் நேற்று இந்தியத் தலைவர்களைச் சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளார்.

பிரதமர் வாஜ்பாயுடன் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.


இந்தியா - பாகிஸ்தான் இடையே அமைதி நடவடிக்கையை முடுக்கிவிடும் நோக்கத்துடன் அமெரிக்க வெளியுறவுத்துறை துணை அமைச்சர் ஆர்மிரேச் இவ்விஜயத்தை மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இவர் பாகிஸ்தான் சென்று சனாதிபதி முஷாரப், பிரதமர் ஜமாலி ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.



இதன் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த ஆர்மிரேச் எல்லைதாண்டிய பயங்கரவாதத்தைக் கைவிட பாகிஸ்தான் அதிபர் முஷாரப் ஒப்புக் கொண்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று டெல்லி வந்துள்ளார்.



இஸ்ரேலிய உலங்குவானூர்தி பலஸ்தீனிய காசாப் பகுதியில் நேற்று முன்தினம் கார் ஒன்றின் மீது நடத்திய ஏவுகணைத்தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார். இத்தாக்குலிற்கு உள்ளான காரை பலஸ்தீனியர் பார்வையிடுகின்றனர்.

## இந்திய செயற்கைக்கோள் செயற்படத் தொடங்கியது

இந்தியா விண்ணில் செலுத்தியுள்ள செயற்கைக்கோள் ஜி.சற் வெற்றிகரமாக செயற்படத் தொடங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

செயற்கைக் கோளிலிருந்து சமிஞைகள் வரத் தொடங்கியுள்ளதாக இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் கூறியுள்ளது.

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட செயற்கைக்கோள் நேற்று முன்தினம் சிறிகரிக்கோட்டா தளத்திலிருந்து விண்ணில் செலுத்தப்பட்டுள்ளது.

மின்னல் வேகத்தில் பறந்து சென்ற இந்த ராக்கெட் புறப்பட்ட 17 ஆவது நிமிடத்தில் 36000 கிலோ மீற்றர் கடந்து, செயற்கைக்கோளை அதன் சுற்றுவட்டப்பாதையில் செலுத்தியது.

வானிலை ஆய்வு சூரியனின் கதிர்வீச்சு போன்ற ஆய்வுப் பணிகளுக்காக ஏவப்பட்ட இச்செயற்கைக்கோள் தற்போது நல்லநிலையில் இருப்பதாகவும், சுற்றுவட்டப் பாதையில் வலம் வரத்தொடங்கி விட்டதாகவும் இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளார்கள்.



ஈராக் பாக்தாத்தில் துப்பாக்கிச் சூட்டுக்காயத்திற்கு இலக்காகி காயமடைந்த ஈராக்கியர் ஒருவரை அமெரிக்கப் படைகள் வாகனத்தில் ஏற்றுகின்றன.

## பேருந்து மோதியது

### - தஞ்சையில் மூவர் பலி, 19பேர் காயம்

தஞ்சை மாவட்டத்தில் அரச பேருந்து ஒன்று சாலை ஓர மரத்தில் மோதியதில் அதில் பயணம் செய்தவர்களில் 03 பேர் மரணமடைந்துள்ளனர். 04 பெண்கள் உட்பட 19 பேர் காயமடைந்துள்ளனர்.

திருச்சியிலிருந்து வேளாங்கண்ணி சென்றுகொண்டிருந்த இப்பேருந்து நேற்று முன்தினம் காலை ஒரு மரத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

## - ஈரானின் அணுகுண்டு உற்பத்தி - அமெரிக்காவின் குற்றச்சாட்டு பற்றி ஐ.நா. கவனம் செலுத்த விரும்பவில்லை

ஈரான் அணுகுண்டு உற்பத்தித் திட்டத்தில் ஈடுபட்டு வருவதாக அமெரிக்கா தெரிவித்து வரும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஐ.நா. அமைப்பின் அணுவாயுதப் பிரிவு கவனம் செலுத்த விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் அணுகுண்டு தயாரிக்கும் தொழில் நுட்பத்தைக் கொண்டுள்ள ஈரான் அதனை அரசியல் வரையறைக்குக் கொண்டு செல்லவில்லை என்று ஐ.நா. அமைப்பின் பாதுகாப்பு சபையின் உறுப்பு நாடொன்று ரொய்ட்டருக்கு தெரிவித்துள்ளது.

## மலேசியாவிலிருந்து இந்தியா வந்த வைத்தியருக்கு 'சார்ஸ்' நோய்

மலேசியாவில் இருந்து பெங்களூர் திரும்பிய வைத்தியர் ஒருவருக்கு சார்ஸ் நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த மருத்துவர் ரஞ்சன் போல் என்பவர் இந்திய-மலேசிய கூட்டு நிறுவனம் ஒன்றில் தலைமை அலுவலராகக் கடமை புரிந்து வருகிறார்.

பணி தொடர்பாக மலேசியா சென்ற அவர் கடந்தமாதம் பெங்களூர் திரும்பியிருந்தார். அவருக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டதையடுத்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இவரது ரத்தம் பரிசோதிக்கப்பட்டபோதே அவருக்கு சார்ஸ் நோய் இருப்பது தெரிந்துள்ளமையினால், அவர் தனியறையில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

## தமிழை ஆட்சிமொழியாக்கக் கோரி இந்தியப் பிரதமருக்கு தமிழகக் கட்சிகள் மனு

தமிழை மத்திய மொழியில் ஆட்சிமொழியாகவும் செம்மொழியாகவும் அறிவிக்க வேண்டும் எனக்கூறி பிரதமர் வாஜ்பாயிடம் தி.மு.க., மற்றும் பா.ம.க., ம.தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்கள்மனு ஒன்றை நேற்று முன்தினம் கையளித்துள்ளனர்.

இதற்கு முன்னர் தமிழக முதல்வர் ஜெயலலிதா உட்பட சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழை ஆட்சிமொழியாக அறிவிக்க வேண்டும் என கோரிக்கைவிடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.




(01) கொக்கோ கோலா அறிமுகப்படுத்தப்பட்டபோது அதன் நிறம் என்ன?
பச்சை

(02) கை மணிக்கூடு தயாரிப்பதில் உலக புகழ் பெற்ற நாடு எது?
- சுவிட்சர்லாந்து.

(03) உலகில் மிகப் பெரிய தேசியக் கொடியை உடைய நாடு எது?
- பிறேசில்(328 அடி 1 அங்குலம்)

(04) கொலம்பிய விண்ஒடம் வெடித்தமையை அடுத்து பெண்களை விண்வெளிக்கு அனுப்புவதில்லை என முடிவு செய்துள்ள நாடு எது?
- ரஷ்யா.

(05) ஒட்டகம் பாலைவனத்தில் மணிக்கு எவ்வளவு தூரம்நடக்கும் ஆற்றலுடையது?
- 15 கிலோமீற்றர்.

(06) உலகிலேயே அதிக விமானப் பயணத்தை மேற்கொண்டு கின்னஸ் புத்தகத்தில் அண்மையில் இடம் பிடித்தவர் யார்?
- ஜாஸ்பிர்குமார் பேடி (இந்தியா)

(07) எமது இதயம் ஒரு நாளைக்கு அண்ணளவாக எத்தனை தடவை துடிக்கின்றது.?
- ஒரு இலட்சத்து மூவாயிரத்து எண்பது தடவைகள்.

(08) கி.மு 3000 ஆம் ஆண்டிலேயே மெழுகுவர்த்தியைக்கண்டுபிடித்தவர்கள் யார்?
- கிரேக்கர்கள்.

(09) டிஜிட்டல் வீடியோ டிஸ்க்(டி.வி.டி) எப்போது அறிமுகமானது?
- 1995 இல்.

(10) சார்ஸ் (**sars**) என்பதன் விரிவாக்கம் என்ன?
- **Severe Acute Respiratory syndrome.**

(11) உலகில் பழமை வாய்ந்த மருத்துவக் கலாசாலை எது?
- லண்டனில் உள்ள **Royal College Of Physitis**(1518இல் ஆரம்பமானது.

(12) காற்று மூலம் மின் சக்தி தயாரிப்பதில் முன்னிலையிலுள்ளநாடு எது?
- ஜேர்மனி.

13) நாலரை ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் மரங்கள் எவை?
- மூங்கில், கொடைப்பனை.

(14) தீபெத்தில் தொடங்கி இமாச்சலப் பிரசேத்தினுள் நுழையும் நதி எது?
- சட்லஜ்

(15) வேப்பமரம் இல்லாத நாடு எது?
- ஜேர்மனி.

(16) இலட்சத்தீவு என்று எத்தனைதீவுகளை வர்ணிக்கப்படுகின்றது?
- 27 தீவுகள்.

(17) உலகக்கோப்பை கிரிக்கெட்டில் 07 ஓவர்களில் 15 ரன்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து, 07 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி சாதனை புரிந்த வீரர் யார்?
- மெக்ராத்(அவுஸ்திரேலியா)

(18) இசை. கலை என்பவற்றிற்கு வழங்கப்படும் அதியுயர் விருதின் பெயர் என்ன?
- போலார்.

(19) அரேபியா எனும் பாலைநிலம் அமைந்துள்ள இடம் எது?
- சிரியா.

(20) கங்காரு நாடு என வர்ணிக்கப்படும் நாடு எது?
- அவுஸ்திரேலியா.

# உடலில் ஊசியால் குத்தும் அக்குபங்சர் வைத்தியம்

இன்றைய உலகில் விஞ்ஞானம் விண்ணைத் தொட்டுவிட்டது. அவ் விஞ்ஞானம் வைத்தியத்துறையில் அரிய பல சாதனைகளை இன்னும் இன்னும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் அதேவேளை, "அக்குபங்சர்" மருத்துவ முறையும் தனது நிலையில் இருந்து வளர்ந்து கொண்டுதான் இருக்கின்றது என்பதை மறுக்க முடியாது இருப்பதற்குக் காரணங்களும் இல்லாமலில்லை.

அதேநேரம் எமது நாட்டில் இவ் வைத்திய முறை பெரும் வர வேற்பை பெறவில்லை என்பதுடன், மக்களால் பெரிதும் ஏற்றுக் கொள்ளப்படாத மருத்துவ முறையாகவும் இருக்கின்றது.

இதற்குக் காரணம் இவ்வைத்திய முறையை நாம் அறிவதற்கான சாத்தியங்களும், சந்தர்ப்பங்களும் சரியாக அமையவில்லை என்று வாதிடுபவர்களும் இருக்கின்றார்கள்.

எனினும், அக்குபங்சர் என்றால் என்ன என்பதை நாம் நோக்கின்;

அக்குபங்சர் வைத்திய முறையின் தாயகம் சீனா என்பதில் எந்தவித மாற்றுக்கருத்துக்கும் இடம் இல்லை. கிறிஸ்துவுக்கு முன் 2600 ஆண்டுகளில் சீனாவில் ஆரம்பிக்கப்பட்டது தான் இவ் வைத்தியம் அக்குபங்சர் முறை உருவாகிய சம்பவமே ஒரு நகைச்சுவைதான். பேரரசர் ஹீவாங்க்கு தலைவலி ஏற்பட்ட தாம் அப்போது அம்பு ஒன்று அவரின் தோள் பட்டையில் குத்தியதாம். அவரது தலைவலி அத்துடன் நீங்கியதாகவும் அதன் பின்னரே இவ்வைத்தியம் உருவானதாகவும் கூறப்படுகிறது.

அக்குபங்சர் வைத்தியம் மனித உடலின் நாடித்துடிப்பை வைத்து மேற்கொள்ளப்படுகிறது. மனித உடலில் ஒருவித மின்சார சக்தி சுழல்கிறது. அது குறைவாகவோ அன்றி அதிகரித்தோ காணப்பட்டால் அதனை சரி செய்வதன் மூலம் வியாதியைக் குணப்படுத்த முடிகிறது என்றும் கூறப்படுகின்றது.

முன்னைய காலத்தில் ஊசிகளுக்குப் பதிலாக எலும்புக்களையும், பீங்கான் துண்டுகளையும் வெள்ளிதங்க ஊசிகளுமே உடலில் குத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டன.

உடலில் 12 பாதைகள், ரேகைகள் உள்ளன என்றும் இவற்றில் 900 ஊசிகள் குற்றுவதற்கான இடங்கள் உள்ளன என்றும் ஒவ்வொரு ஊசியும் ஒரு அங்குலத்தில் பத்துப் பாகத்தில் குற்றப்பட வேண்டும் என்றும் அவை எங்கே குற்றவேண்டும் என்பதற்கான விதிமுறைகள் எல்லாம் உண்டு எனவும் இவ்வைத்திய முறையில் கூறப்படுகின்றது.

ஊசிகள் குற்றப்படவேண்டிய வேகம் ஆழம் என்பவற்றை நோய்க்கு ஏற்றவாறு மாற்றம் செய்து குற்றபடும். இவ்வாறு வேகத்தையும் ஆழத் தையும் மாற்றுவதன் மூலம் உட லின் மின் சக்தியின் தன்மையையும் உடல் உபாதையையும் கட்டுப் படுத்தி வியாதியைக் குணப்படுத்த முடியும். முன்னைய காலங்களைப் போலன்றி தற்போது மெல்லிய எவர் சில்வர் ஊசிகளே பயன்படுத்தப்படு கிறது.

இம்மருத்துவ முறையை அனஸ்தீஸியாவுக்கு கூட உபயோகிக்கிறார்கள். இந்த நோய்க்கு ஊசிகளைச் செலுத்தும் இடங்களைத் தெரிவு செய்து இரண்டு அங்குல ஆழத்துக்கு மேல் கூட வலிஏதும் தெரியாமல் ஏற்றுகிறார்கள்.

அக்குபங்சர் மருத்துவத்தில் சாதனை கூடப் புரிந்திருக்கிறார்கள். 1971 ஆம் ஆண்டு அக்குபங்சர் ஊசிகளை ஏற்றி பெண்மணி ஒருவரின் இதயத்தை மருத்துவர் கையில் எடுத்துக் காட்டியதாக 'நியூயோர்க் டைம்ஸ்' ஆசிரியர் தனது கருத்தில் உறுதியாகக் கூறுகிறார். இதயம் இழந்த அப்பெண்மணி குளிர்பானம் அருந்தியவாறு அமர்ந்திருந்தாளாம் பார்த்தவர்கள் கொஞ்சம் அதிர்வடைந்து போனார்கள். என்றும் அப்பத்திரிகை ஆசிரியர் மேலும் கூறியுள்ளார்.

மருத்துவ உலகில் இத்தகைய மிகப் பெரும் சாதனை படைத்த இந்த அக்குபங்சர் மருத்துவமுறை பெருமளவில் பரவவில்லை என்பது உண்மைதான். ஆனாலும் இந்த மருத்துவ முறையால் பெரும் பெரும் சாதனைகள் கூட நிகழ்த்தப்பட்டன என்பதை மறுக்கமுடியாது இந்த மருத்துவ முறை எவ்வாறு செயல்படுகிறது என்பதற்கான மருத்துவ ரீதியான சரியான காரணம் இன்று வரை கண்டுபிடிக்கப்படவில்லை.

சீனாவில் சிறு வயதில் காது கேட்காதுபோகின்றவர்களில் 90 வீதத்திற்கு மேலானவர்களுக்கு மீண்டும் காது கேட்க வைக்க இந்த மருத்துவ முறையால் முடிந்தது.

மனநோயால் பீடிக்கப்பட்டவர் களை கூட அக்குபங்சர் மருத்துவ முறையாலும் சில மூலிகை வைத்தியங்களும் சேர்த்துக் குணமாக்கினார்கள்.

எமக்கு ஒரு அதிர்ச்சி தரக் கூடிய தகவலை கூறும் போது அந்தத் தகவல் எமது மூளையைச் சென்ற டையாது. அக்குபங்சர் மருத்துவ முறையால் தடுக்கவும் முடியும். இத்தகைய சாதனைகள் படைத்த அக்குபங்சர் மருத்துவமுறை எமது பகுதிகளில் பெரிதாகத் தனக்குரிய இடத்தை பிடிக்காதமைக்குக் கார ணங்கள் பலவாறாகக் கூறப்படுகின் றது. அக்குபங்சர் என்பது சரியான முறையில் மக்களிடம் சென்றடையாமை. அடுத்து சென்றடையும் முறைகளில் பயமும் கலந்திருப்பது ஆகும்.

எவ்வாறு எனில் எமது உடலில் 12 பாதைகள், ரேகைகள்உள்ளன என்பதுடன் 900 ஊசிகள், குற்ற முடியும் என்பதும் மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாது இருப்பதுடன், இது நடைமுறைக்கு ஒத்துவருமா... எனும் அச்சமும், அக்குபங்சர் முறையை அவர்கள் நாடாமல் இருப் பதற்கும் வழி சமைத்து விடுகின்றது.

அதனால்தான் எம்மிடையே 'அக்குபங்சர்' எனும் மருத்துவ முறை அருகிப் போய்க்கொண்டிருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

# செவ்வாய் தரையில் மனிதனை இறக்கும் முயற்சி சாத்தியமா...?

செவ்வாய்க் கிரகத்தில் ஊர்திகளை இறக்கி அதன் தரையை ஆராய்வதற்கு முயற்சி செய்துவரும் நாஸா இதன் பொருட்டுப் பெருமளவு தகவல்களை. அக்கிரகத்தை இப்போது வலம்வந்து கொண்டிருக்கும் "மார்ஸ்குளோபல் சேர்வயர்" எனும் செய்மதியூடாக அறிந்துகொண்டுள்ளது.

1997ஆம் ஆண்டிலிருந்து இச் செய்மதி செவ்வாய்கிரகத்தை வலம் வந்து கொண்டிருக்கிறது. செவ்வாய்த்தரை அதன் நிலத்தடி நீர் அல்லது பனிப்பாறை மாறும் கால நிலை, தட்பவெப்பநிலை போன்ற விபரங்களைக் கண்டறிந்து பூமிக்கு இது அனுப்பிக் கொண்டிருக்கின்றது.

இதுவரை இச்செய்மதி அனுப்பி வைத்துள்ள புகைப்படங்களில் ஒரு இலட்சத்து 23 ஆயிரத்து எண்ணூறு படங்களை நாஸா இண்டர் நெட்டில் விட்டுள்ளது.

சமீபத்தில் 11ஆயிரம் புதிய புகைப் படங்கள் இன்டர் நெட்டுக்கு விடப் பட்டதாக நாஸா தெரிவித்துள்ளது.

இச்செய்மதி தந்திருக்கும் தகவல்கள் மட்டும் இல்லாதிருக்கமானால் புதிய செவ்வாய் ஊர்திகளை அக்கிரகத்தில் இறக்கும் திட்டமே மேற்கொள்ளப்பட்டிருக்காது. என்று கூறி இருக்கிறார். செவ்வாய் கிரகத் திட்டத்திற்குப் பொறுப்பான நாஸா விஞ்ஞானியான ஜேம்ஸ்கார்வின்.

விஞ்ஞானிகளுக்கு இப்போது நிச்சயம் செய்துகொள்ள வேண்டிய ஒரே விசயம், செவ்வாய்கிரகத்தின் நிலத்தடியில் தண்ணீர் இருக்கின்றதா... என்பதுதான்.

"குளோபல் சேர்வயர்" அனுப்பியுள்ள தகவல்களின் படி நிலத்திற்கு அடியில் திரவ நிலையில் தண்ணீர் இருப்பதாகவே தெரிகின்றது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

துருவங்களில் ஐஸ்பாறைகள் இருப்பதும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. திரவநிலைத் தண்ணீர் இருக்குமானால் இக்கிரகம் பற்றி எல்லா அபிப்பிராயங்களும் அப்படியே தலைகீழாக மாறிப் போய்விடும்.

செவ்வாய்கிரகத்தில் மனிதனை இறக்கவேண்டும் என்பது நாஸாவின் விருப்பம். பெருஞ்செலவை ஏற்படுத்தும் திட்டம் இது. மேலும் மிகத்துல்லியமாகத் திட்டமிட்டு நிறைவேற்றவேண்டிய காரியமும் கூட.

எடையற்ற ஆழ் விண்வெளியில் மனிதன் மாதக் கணக்கில் பயணம் செய்வது என்பதோ... முற்றிலும் வேறான கிரகத்தில் தரை இறக்கி மீண்டும் திரும்பி வருவது என்பதோ... சுலபமான காரியமல்ல.

இப்பயணத்தின் பொருட்டு இரத்தமும் சதையுமான மனிதனை தயார் படுத்துவது மிகவும் கஸ்ரமான காரியம்.

பூமியிலிருந்து புறப்படும்போது சுகதேகியாவும், மனத்தெளிவுடனும் இருக்கும் விண்வெளிவீரர்கள் செவ்வாய்கிரகத்தை அடையும் போது உடல்நிலையும் மனநிலையும் குன்றியவர்களாக ஆகிவிட்டால் என்ன செய்வது... என்ற வினாவுக்கு இது வரை பதில் இல்லை.

இச்சங்கடங்களைத் தவிர்ப்பதற்காகத்தான் மனிதர்களுக்குப் பதிலாக ஊர்திகளையும் இயந்திர மனிதர்களையும் செவ்வாய்க்கு அனுப்பி வைக்கலாமே என்று சில விஞ்ஞானிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

# உலகை உலுக்கிய பயங்கர நோய்கள்

- ஸ்பானிஷ்ஃப்ளூ:- 1918-19ம் வருடங்களில் பரவிய இந்த விஷ காய்ச்சல் உலகம் முழுவதும் இரண்டு கோடி மக்களைக் கொன்றது.
- ஏஷியன்ஃப்ளூ :- இந்த ஆட்கொல்லி ஃப்ளூ காய்ச்சல் முதலில் சீனாவில் பரவத் தொடங்கியது. 1957 இல் பரவிய இந்தக் காய்ச்சல் உலகின் பல பகுதிகளில் பரவியது. இதனால் பத்து லட்சம் பேர் மரணமாகியுள்ளார்கள்.
- ஹாங்காங்ஃப்ளூ:- 1968-69 ஆம் ஆண்டு உலகைக் கொடுமையாகத் தாக்கியதால் ஹாங்காங்கில் பல்லாயிரக்கணக்கானவர்களைக் கொன்றது. உலகம் முழுவதும் ஏழு லட்சம் பேர் இந்நோய்க்குப் பலியானார்கள்.
- ஸ்பைன் ஃப்ளூ:- 1976 ஆம் வருடம் அமெரிக்க இராணு வீரர் ஒருவரை இந்நோய் தாக்கி அவர் மரணமடைந்தார். அவரைத் தொடர்ந்து பலருக்கு இந்த நோய் பரவிவிடுமோ என்று அமெரிக்க அரசு அஞ்சி துரித நடவடிக்கைகள் எடுத்தது. இதனால் இந் நோய் பரவவில்லை.
- ஏவியன்ஃப்ளூ:- பறவையிலிருந்து மனிதனுக்குப் பரவிய விஷ காய்ச்சல் 1997 இல் ஹாங்ஹாங் கோழிகளைத் தாக்கிய இந்நோய் மக்களுக்குப் பரவத் தொடங்கியதில் 06 பேர் மரணமடைந்தார்கள். நாட்டிலுள்ள பதினைந்து லட்சம் கோழிகளைக் கொன்று நோயிலிருந்து மக்களைக் காப்பாற்றியது ஹாங்காங் அரசு.
- சாஸ்:- தற்போது உலகெங்கும் பரவி இருக்கும் இந்நோய் 100 பேர்வரை பலிகொண்டுள்ளது.2000 பேர் வரை இந்நோய் பீடித்திருக்கின்றது.

# உலகம் பரவிய தமிழின் வேர்-கல்

## ஒரு மொழிப் போராளியின் தமிழ்ச்சொல் மீட்புப்பணி

தொல்லியலாய்வினூடாக இழக்கப்பட்ட, மறைக்கப்பட்ட நாகரிகங்களை வரலாற்றுப் பெருமைகளை தொல்லியலாய்வாளர்கள் மீட்டெடுத்து வெளிக்கொணர்வது போன்றே வழக்கிழந்து மறைந்துபோன சொற்களிற் பலவற்றை வேர்சொல்லாய்வினூடாக சொல்லாய்வாளர்கள் மீட்டு வெளிக்கொணர்கின்றனர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்வரை எமது முன்னோர்கள் எமக்கென ஆக்கி வைத்திருந்த பல்லாயிரக்கணக்கான சொற்களடங்கிய சொற்களஞ்சியத்திலுள்ள சொற்கள் பலவற்றைப் பயன்படுத்தாததால் எமது சொற்செல்வம் குறைந்தது மட்டுமன்றி எம்மக்கள் காலத்தின் தேவைக்கான புதிய சொற்களை ஆக்காது பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்கிப் பயன்படுத்தியமையால் பிற்காலத்திலே தோன்றிய மொழிகளுக்கெல்லாம் வழிவிட்டு உலகின் உயர்தனிச் செம்மொழியாகத் திகழ்ந்த எம்மொழி தாழ்ந்திருக்கும் நிலை ஏற்பட்டது. பிறமொழிச் சொல்லூடுருவல்களினால் மொழிச்சிதைவு ஏற்பட்டு பல கிளை மொழிகள் உருவாகின.

சொல்லாய்வாளர்கள் ஒரு சிலர் வேர்ச் சொல்லாய்வுகளின் ஊடாக சிறந்த எமது பழந்தமிழ்ச் சொற்கள் பலவற்றை மீட்டெடுத்ததோடு தேவைக்கேற்ப புதிய சொற்களையும் ஆக்கி வழங்கி வருவதனால் எமது மொழி முற்றிலும் அழிந்து சிதையாது பேணப்பட்டுவருகிறது.

ஆயினும் தமிழ் நிலத்தில் சொல்லாய்வாளர்களுக்கு, மொழிவல்லுனர்களுக்கு, ஆக்கமோ, ஊக்கமோ, வரவேற்போ வழங்கப்படாதது மட்டுமன்றி அவர்களது உழைப்பையும் பணியையும் இகழ்வதும் இழிவுபடுத்துவதும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

மண்ணை மீட்கும் விடுதலைப் போராளிகள் போன்றே சொல்லை, மொழியை மீட்கும் போராளிகள் அவர்கள். அதனாற்தான் சொல்லாய்விலீடுபட்டு எமது மொழியைக் காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள சொல்லாய்வாளர் முனைவர். கு.அரசேந்திரன் அவர்களை அவரது நூலுக்கெழுதிய பாயிரத்தில் எமது உணர்ச்சிப்பாவலர் காசியானந்தன் அவர்கள் "மொத்தியெழுதும் மொழிப்போராளி" எனப் பாராட்டியுள்ளார்.

அந்தமொழிப்போராளி உலகம் தழுவிய தமிழின் வேர்-கல் என்ற ஆய்வுநூலின் இருபாகங்களை "தாயகக்கனவுடன் சாவினைத்தழுவிய சந்தன மேனியரான" எம் மாவீரர்களுக்குப் படையலாக்கியுள்ளார். அதனுடன் தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழ.நெடுமாறன் அவர்கள் வாழ்த்துரை, ம.தி.மு.க. செயலாளர் வை.கோ. அவர்களது பாராட்டுரை, உணர்ச்சிப்பாவலர் காசியானந்தன் அவர்களின் பாயிரம் என்பவற்றோடு தனது ஆய்வுரை நூலை அரங்கேற்றியுள்ளார்.

அதுமட்டுமன்றி அந்நூலில் தாயகமண் மீட்புப் போரை வீறோடு நடத்திவரும் எமது தேசியத் தலைவர் அவர்கள் பற்றி முனைவர் கு.அரசேந்திரன் எடுத்துக்கூறத் தவறவில்லை. அதில் அவர் "சூடும் சுரணையும் உள்ள சில நூறுபேர் கண்ணீர்விட்டுக் கதறும் பலர்களாகத் தமிழகத்தில் தேம்பித்திரியும் நிலையில் தமிழினம் உருக்கொண்டு கருக்கொண்ட மூல நிலமாம் குமரிகண்டத்தின் எஞ்சிய துண்டுக்காணியாய் கடலில் மிதக்கும் தமிழீழத்தில் உலகத்தின் மறு சுழற்சிக்கான அடிக்கோல் நடப்பட்டுவிட்டது."

"வந்தேறிய சிங்கள ஆரியக் குற்றினத்தால் தமிழீழத் தமிழினம் அல்லலில் உழன்றாலும் மீண்டும் மாண்ட பெருமையை மீட்டும் வல்லமையில் அதன் தேசியத்தலைவரால் உலகின் புருவங்கள் உயர இன்று சிலிர்த்தெழுந்து நிற்கிறது". என்ற உண்மையை எடுத்துக்கூறியதுடன் நின்றுவிடாது, "...இந்த இனத்துக்கொரு தலைவரை இயற்கை வழங்கிப் பெருமூச்சுவிட்டிருக்கிறது. அந்தத் தலைவர் கழுத்தில் மாலைகள் விழும் அந்த நாளிலே தமிழ்த்தாய் கண்ணீரை நிறுத்தி மீண்டும் கண்ணீரைச் சொரிவாள். அது மகிழ்ச்சிக் கண்ணீராக இருக்கும். அந்த நாளின் பின் உலகம் தமிழ் மொழியின் மூலம் எது என்பதைத் தேடித் திரும்பும்" எனத் தமிழீழத்தின் விடிவின் பின்னரே எமது தலைவரின் வெற்றியின் பின்னரே தமிழின் விடிவு வரும் என்பதை வெளிப்படுத்துகின்றார்.

தமிழின உரிமை மீட்புக்காக விடுதலைப் போராளியாக வரவேண்டும் என்று தொடக்க காலத்தில் விரிந்த அவரது எண்ணச் சிறகுகள் காலச் சூழலால் தமிழ் மொழியை மீட்கக் கூடிய மொழிப்போராளியாக அவரை எமக்குத் தந்திருக்கிறது. 1984இல் அவர் படைத்தகால் அடிதாள்-சொல்வரலாற்று நூலுக்கு அன்றைய தமிழக அரசு பரிசை வழங்கியதானது அவரைச் சொல்லாராய்ச்சியில் ஆர்வத்தோடு தொடர்ந்து ஈடுபடவைத்துள்ளதெனலாம்.

முனைவர் கு.அரசேந்திரன் அவர்கள் இந்நூலில் எமது வேரின் மூலங்கள் கலந்துள்ள உலக மொழிகளையெல்லாம் வெளிப்படுத்தி எமது மொழிக்கு ஏற்றத்தையும் பெருமையையும் தந்துள்ளார்.

ஆரியர் இந்தியாவுக்குள் நுழைவதற்கு முன்னர் இந்தியா முழுவதும் திராவிடரே பரவியிருந்தனர் என்ற வரலாற்று உண்மையை நேரு அவர்கள் சிறையிலிருந்து மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருக்கிறார். முனைவர் கு.அரசேந்திரன் அவர்கள் இமயம். காசுமீரம் என்னும் இடப்பெயர்கள் கூட தமிழ்ச் சொற்களே என அடுக்கடுக்கான பல்வேறு சான்றுகளோடு இந்நூலில் நிறுவியிருக்கிறார். கடந்த 2000 ஆண்டு காலத்தில் ஆரியத்தின் கலப்பால் தமிழ் நாட்டின் பெரும் பகுதியை இழந்துவிட்ட நிலையில் தமிழ்நாடு எனப்பெயர் சூடியதன் பின்னர் தமிழகம் திராவிடக் கட்சிகளின் பொறுப்பின்மையால் ஆங்கிலம் விரவிக் கலந்து தமிழகம் தமிங்கில நாடாக மாறிவருவதையிட்டு முனைவர் அரசேந்திரன் தனது மனக்கலக்கத்தை இந்நூலில் வெளிப்படுத்தியுள்ளார்.

**வெ. இளங்குமரன்**
**தமிழ்வளர்ச்சிக் கழகம்**
**தமிழீழம்**

தமிழ் அழிந்துவரும் நிலையையிட்டு என்றுமில்லாத அளவு கும்மாள மகிழ்ச்சியிலேயே திழைத்திருக்கும் பிறவித் தமிழ்ப் பகைவருக்கு இன்று இடியாகத் தெரிவது தென்திசை என்றும் அத்தென்திசை இனப் பகைவர்களுக்கு இயமன் திசை என்றும் அத்திசையில் வெடிக்கும் வெடிப்பை உலகம் பார்த்து வியந்துவெகுண்டு நிற்கின்றதென்றும் அதைப்பார்த்துத் தமிழ் நாட்டுத் தமிழரும் ஆர்த்தெழுந்து போர்ப் பரணியை முன்னெடுக்கும் நாள் விரைவில் வரும் என்றும் முனைவர் கு.அரசேந்திரன் ஆறுதல் கொள்கிறார்.

தமிழின ஏற்றத்தின் ஏணியாக அமைந்துள்ள உலகம் பரவிய தமிழின் வேர்-கல் என்ற ஆய்வுநூலை வாங்கிப் பயன்படுத் துவதனூடாக நாமும் ஏற்றமுறுவதுடன் மொழிப் போராளியின் தமிழ்ச்சொல் மீட்புப் பணிக்கும் ஊக்கம் கொடுப்போம். ●

# எவ்வேளையும் தேநீர்வேளை

"கமெல்லியா சின்னெனிஸ்" எனும் தாவரப் பெயரை உடைய தேயிலை சுவையான தேநீர் தயாரித்து அருந்த மட்டும் தானா என்று நினைத்தால் அது தவறு.

இத்தேயிலையானது மருந்துப் பொருளாகவும், அழகு சாதனப் பொருளாகவும் உற்சாகம் தரும் உன்னத பானமாகவும் பயன்படுகின்றமையை அறியலாம்.

சீனாவில் கி.மு. 2737இல் "ஷென் நுங்க்" எனும் மன்னன் வேட்டைக்காக காடுகளில் பயணித்த போதில் வழியில் தண்ணீர் கொதிக்க வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

அவ்வேளையில் உதவியாளரின் கவனக் குறைவால் காட்டுத் தேயிலைச் செடியின் இலைகள் நீரில் விழுந்துவிட்டன. இதனை அருந்திய மன்னர் வெகு சுறுசுறுப்பாக இருப்பதை உணர்ந்தார்

இவ்வாறு தற்செயலாகக் கண்டறியப்பட்ட பொருளே தேயிலையாகும். சீனாவில் தேயிலை பயிரிட்டவருக்கு சிலையும், தேயிலை மியூசியம் ஒன்றும் மக்களின் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டபோது பத்தாயிரத்துக்கும் அதிகமான மக்கள் திரண்டிருந்தனர்.

இம்மியூசியத்தில் பல்வகை தேயிலைப் பானங்கள், தேநீர் தயாரிப்பு உபகரணங்கள், தேயிலை உற்பத்தி பற்றிய புள்ளி விபரங்கள் என்பவற்றை அறியலாம்.

16ஆம் நூற்றாண்டின் பின் சீனத்திலிருந்து ஐரோப்பாவிற்கென தேயிலையை எடுத்துச் சென்ற டச்சுக்காரர்அதனை சீன மொழியில் "டெய்" என்று அறிமுகப்படுத்தினர்.

இந்தியா சாய் என்றும், ஜப்பான் சாயா என்றும், எகிப்து, ஈரானில் ஷேய் எனவும் பலவாறு பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது.

1667 இல் இங்கிலாந்தில் 'தேமஸ்கார்வே' என்பவர் தனது ஹோபிஹோஸ் இல் மருந்தும் அற்புதம் எனத் தேநீரை விளம்பரப்படுத்தினார்.

19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இங்கிலாந்தின் அரச அலுவலகங்களிலும் இடங்களிலும் பகலுணவுக்கு முன் "தேநீர் வேளை" (**Tea time**) என்று ஒன்றை அறிமுகப் படுத்தினர்.

20ஆம் நூற்றாண்டில் சில வருடங்களுக்கு முன்னர் த இன்டிப்பென்டன்ற் எனும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று இங்கிலாந்துத் தேயிலையை கவுன்சில் டிசைன் சென்ரருடன் இணைந்து தேயிலைக்குரிய தேசிய இலட்சினையை தயாரித்து அனுப்புமாறு ஒரு போட்டியை ஏற்பாடு செய்திருந்தது.

இங்கிலாந்தில் பிரதமராக இருந்த வின்ஸ்டன் சேர்ச்சில் அதிகாலையில் எழுந்து சுறுசுறுப்பாக இயங்க அவருக்கு உதவியது தேநீர் தானாம். இங்கிலாந்தின் மற்றொரு பிரதமரான மார்க்கிரட் தட்சர் தான் அருந்தும் தேநீரைப் பற்றி அதிக அக்கறை எடுத்துக் கொள்வாராம். தன் பயணங்களின் போது கணவர் டெனிஸிடம் எப்போதும் ஒரு பக்கெட் தேயிலையை எடுத்துவருமாறு பணிப்பாராம்.

ரஷ்யப் பிரதமர் மிகயல் கொர்ப்பசேவ் என்றும் தன் தேநீர் தயாரிப்பாளரை உடன் அழைத்தே செல்வார்.

இங்கிலாந்தின் அரசி எலிசபெத் தனது தேநீரை தன் கைப்படவே தயாரித்துக் கொள்வதை விரும்புவாராம்.

தேநீருக்கு 'டானின் அமிலம்' என்பதே நிறம் அளிக்கின்றது

எமது பிரதேசத்தில் "எவ்வேளையும் தேநீர்வேளை" என்றுதான் கூறவேண்டும். தேநீர் என்பது எவ்வேளையிலும் அருந்தக்கூடிய பானமாக மட்டுமல்ல, வீட்டுக்கு வரும் விருந்தினருக்கு தவறாது வழங்குமொன்றாகவும் மாறிவிட்டது. அதாவது விருந்தினர்கள் வீட்டுக்குவரும் வேளை எவ்வேளையாயினும் அவருக்கு வரவேற்பு வழங்கும் சம்பிரதாயங்களில் ஒன்றாக தேநீர் வழங்குதல் மரபாகிவிட்டது.


# இடிவிழுந்த பனை....



மனிதனை மரங்களை மின்னல் தாக்கினால் (இடிவிழுந்தால்)... கருகி எரிந்து விடுவதுதான் வழமை. ஆனால் இதற்கு மாறாக கிளிநொச்சி ஜெயந்தி நகரிலுள்ள மனோகரன் என்பவரது வளவிலுள்ள பனைமரம் அதற்கும் தாக்குப் பிடித்து நிமிர்ந்து நிற்கிறது.

இதனை மின்னல் தாக்கி வட்டுப் பகுதி சாய்ந்துள்ள போதும் அதிலிருந்து துளிர்த்து பனை ஓலைகள் காணப்படுகின்றன.

# மட்டத்தேள்கள்



மட்டத்தேள் பல வகைகளில் உண்டு. எல்லாவகை மட்டத்தேள்களுக்கும் நூறு கால்கள் இருப்பதில்லை என்றாலும் சிலவற்றுக்கு நூறு கால்கள் இருக்கும். பலவற்றுக்கு இருபது முப்பது கால்கள் மட்டுமே. அதேபோல் ஆயிரம் கால்கள் உள்ளவையும் உண்டு என ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளார்கள்.

முட்டையிலிருந்து வெளிவரும் போதே சிலவகை மட்டத்தேள்கள் முழுக்கால்களுடனும் வெளிவருகின்றன. சிலவகை ஏழு சோடிக் கால்களுடன் மட்டுமே வெளிவருகின்றன. இன்னும் பல ஏழு சோடிக் கால்களுடன் வெளிவந்து ஒவ்வொரு தடவை தோலுரிக்கும் போதும் ஒரு சோடிக் கால்கள் புதிதாக உருவாகின்றன.

இம் மட்டத்தேள்களுக்குத் தலைக்குப் பக்கத்தில் இரண்டு கொம்புகள் போலவும் வாயில் விஷமும் உள்ளன. எனினும் இவற்றின் விஷம் மனிதருக்கு ஆபத்தில்லை என்றும் கூறப்படுகின்றது.

ஆனால் ஆபிரிக்காவில் உள்ள ஒருவகை மட்டத்தேள்களின் விஷம் பறவைகளைக் கொல்லும் தன்மையுடையது.

# கசப்புமிக்க இரசாயனம்

நாவுக்கு இனிப்புச் சுவையைத் தரக்கூடிய இரசாயனப் பொருட்கள் அறிமுகம் செய்யப்பட்டிருக்கும் உலகில் மிகவும் கசப்பான திரவமொன்றையும் அமெரிக்க விஞ்ஞானிகள் அறிமுகம் செய்துள்ளனர்.

வீலெக்ஸ் (**villex**) என்றழைக்கப்படும் இத்திரவியம் சகரின், டெனடோனியம், பெனசோஎட் ஆகிய மூலகங்களைக் கலந்து தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியை 200,000 மூலக்கூறுகளுடன் கரைத்தால் கூட அது கசப்பு சுவை உடையதாகவே இருக்கும்

இப்பரிசோதனையை மேற்கொண்ட மெல்பிலர்ஸ்(**mell Bellers**) கேரி டி ஹொலண்டர் (**Gary de HOlender**) ஆகியோர் இவ்வாறு கருத்துக் கூறியுள்ளனர்.

# புலிகளின் யோசனைகளை நிறைவேற்ற அரசு துரித கதியில் நடவடிக்கை

## அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவிப்பு



விடுதலைப்புலிகள் தெரிவித் துள்ள யோசனைகளை நிறைவேற்று வதற்கு அரசு துரித கதியில் நட வடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவு களை அறிவிப்பதற்கான செய்தி யாளர் மாநாட்டிலேயே இதனைத் தெரி வித்துள்ளார்.

புலிகள் தெரிவித்துள்ள யோசனை களை நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருவதால் மிகவிரைவில் சமாதானப் பேச்சுவார்த் தைகள் ஆரம்பிக்கப்படும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

# தொழில் திறன் பயிற்சி நெறிகள் கிளிநொச்சியில் ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களத்தின் கீழ் உள்ள பாட சாலைகளில் முறைசாராக் கல்விப் பிரிவினரால் தொழில் திறன் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாகாண கல்வி அமைச்சின் நிதியுதவியுடன் வாகனம் ஓட்டுதல்-கிளிநொச்சி மத்திய கல்லூரி, கணினிப் பயிற்சி-கிளி முருகானந்தா ம.வி., பனம் பொருள் உற்பத்தி வேரவில் இந்து ம.வி, புனித திரேசா பெண்கள் கல்லூரி-சிகை அலங்காரமும் ஒப்பனையும், கனகபுரம் ம.வி, ஜெயபுரம் அ.த.க-தொழிலக தையலும் உடை அமைத்தலும், புனித பற்றிமா றோ.க, முழங்காவில் ம.வி-உணவு தயாரித்தலும் உணவு பதனிடலும் - கனகாம்பிகைக்குளம். அ.த.க, வட்டக்கச்சி ம.வி, பளை மத்திய கல்லூரி-விவசாயத்தொழில் நுட்பவியல், உருத்திரபுரம் ம.வி. யிலும் நடைபெற்று வருகின்றன.

மத்திய கல்வி அமைச்சின் நிதியுதவியுடன் புத்தகம் கட்டுதல், பனம்பொருள் உற்பத்தி-கிளி இந்துக்கல்லூரி, புனிததிரேசா பெண்கள் கல்லூரி ஆகியவற்றிலும் நடைபெறுகின்றன.

யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் கணினிப் பயிற்சி சுருக்கெழுத்து தட்டெழுத்து, சிகையலங்காரமும் ஒப்பனையும், கனரகவாகனம் ஓட்டுதல், பனம்பொருள் உற்பத்தி,ஈருருளி திருத்துதல்,நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதல் ஆகிய பயிற்சி நெறிகள் இம்மாதம் நடுப்பகுதியில் கிளி.வலயக் கல்விப் பணிமனையின் பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கான நேர்முகத் தேர்வுகள் கடந்த,4ஆம் , 5ஆம்திகதிகளில் நடை பெற்றுள்ளன. (பா)

# விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவே ரணில் செயற்பட்டு வருகின்றார்

## பாராளுமன்றத்தில் விமல் வீரவன்ச குற்றச்சாட்டு



புலிகளுக்கு ஆதரவாக ரணில் செயற்பட்டு வருவதாக ஜே.வி.பியின் பிரச்சாரச் செயலர் விமல் வீரவன்ச நாடாளுமன்றத்தில் குற்றம் சாட்டியுள்ளார்.

பிரதமரின் சமாதான முயற்சிகள்தொடர்பான விசேட உரை குறித்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு கூறியுள்ளார். மூதூரில் இடம் பெற்ற அசம்பாவிதங்கள் குறித்தோ, புலிகளது கடற் பிராந்திய விவகாரங்கள் குறித்தோ ஈ.பி.டி. பியினர் கொல்லப்பட்டு வருவது குறித்தோ பிரதமரின் உரையில் எத்தகைய கருத்துக்களும் இடம்பெற வில்லை என அவர் விசனம் தெரிவித்துள்ளார்.

# -இருதய நோயாளியிடம்- 40 ஆயிரம் ரூபா பணம் பெற்ற சிற்றூழியரிடம் விசாரணை

இருதய சத்திரசிகிச்சையை மேற்கொண்ட வைத்திய நிபுணருக்குப் பணம் கொடுக்க வேண்டும் என்று நோயாளி ஒருவரிடம் இருந்து 40 ஆயிரம் ரூபாவைப் பெற்ற சிற்றூழியர் ஒருவர் தொடர்பாக சுகாதார அமைச்சு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

கொழும்பு தேசிய வைத்திய சாலையில் இருதய சத்திரசிகிச்சைக்காக நோயாளிகள் நீண்ட வரிசையில் நின்று பதிவு செய்கின்றனர்.

அதனால் இந்த சிகிச்சையை நேரகாலத்துக்கு ஏற்பாடு செய்வதாகவும் அதற்கு 40 ஆயிரம் ரூபா வைத்தியருக்கு வழங்க வேண்டும் எனவும் சிற்றூழியர் நோயாளியிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதனை நம்பிய நோயாளி முதலில் 10 ஆயிரம் ரூபாவையும், சத்திரசிகிச்சையின் பின்னர் 30 ஆயிரம் ரூபாவையும் கொடுத்ததாகவும், விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

நோயாளி தமது சிகிச்சையின் பின்னர் வைத்தியரைச் சந்தித்த போது பண விடயத்தைக் கூறியதை அடுத்தே, வைத்தியர் சுகாதார அமைச்சுக்கு இதனைத் தெரியப் படுத்தினார். இதனையடுத்தே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

# சமாதான முயற்சிகளை குறைகூறுவோர் மாற்றுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும்

## - கதிர்காமரின் உரைக்கு ராஜிதசேனாரட்ண பதில்



(கொழும்பு)

சமாதான முயற்சிகளைக் குறை கூறும் கதிர்காமர் மாற்றுத்திட்டத்தை முன் வைக்க வேண்டும் என சிறிலங்கா காணி அமைச்சர் ராஜித சேனாரட்ண பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கதிர்காமரின் உரையைத் தொடர்ந்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில்; சமாதானப் பேச்சுவார்த்தை முறிவடைந்து யுத்தம் ஆரம்பிக்கப்படுமானால் எமக்கு அமெரிக்க உதவி தயாராக உள்ளது. அத்துடன் தமிழீழ விடுதலைப்புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்த சர்வதேச சமூகம் முயற்சித்து வருகிறது. சமாதான முயற்சிகளைக் குறைகூறும் கதிர்காமர் அதற்கான மாற்றுத் திட்டத்தை முன் வைக்க வேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

# சு.க - ஜே.வி.பி பேச்சுவார்த்தை முக்கிய விடயங்களில் இணக்கம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பி.க்கும் இடையில் இடம் பெற்ற பேச்சுவார்த்தைகளில் முக்கியமான விடயங்களுக்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இது குறித்து இருதரப்பினருக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் ஊடகங்களுக்கு அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புரிந்துணர்வு உடன்படிக் கையை மக்களுக்கு அறிவிப்பதற்கென்று கொழும்பில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றை நடாத்த இரு கட்சிகளும் தீர்மானித்துள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பதிவுகள் நடைபெற்றன

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில் இதுவரை பிறப்பு, இறப்புப் பதிவுகளை மேற்கொள்ளாத மக்களுக்கு கடந்த 5 ஆம் திகதி காலை 8 - 12 வரை மாங்குளம் தென்னிந்தியத் திருச்சபையிலும், மாலை 2-4 மணிவரை ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திலும் நடமாடும் சேவை பதிவுகளை மேற்கொண்டது. இதில் பெரும்பகுதி மக்கள் நன்மையடைந்துள்ளனர். (05)

## அவசர ஒன்றுகூடல்

தேவிபுரம், கைவேலி, வள்ளிபுனம் பகுதிகளைச் சேர்ந்த அனைத்து வாணிப நிலையத்தினருக்கும் இன்று அவசர ஒன்றுகூடல் பிற்பகல் 3.00 மணிக்கு வள்ளிபுனம் வலயச் செயலகத்தில் நடைபெறும். இதற்கு அனைத்து வர்த்தகர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு வள்ளிபுனம், உடையார்கட்டு வலயப்பொறுப்பாளர் மயூரன் கேட்டுள்ளார் (19)

## பனைசார் பயிற்சி நிலையம்

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் நல்லூர் ஆலங்கேணியில் பனை அபிவிருத்திச் சபையும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து பனைசார் பயிற்சி நிலையம் ஒன்றினை ஆரம்பித்து வைத்துள்ளனர். பூநகரிப் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் கருணா தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பயிற்சி நெறியினை போதனாசிரியர் க. சிவராசா ஆரம்பித்து வைத்தார் இப்பயிற்சி நெறியில் பல பெண் பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர். (பா)

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் வெட்டிக்கொலை

தெகிவளையில் வீடொன்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கொடூரமான முறையில் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளது.

தந்தை, மகன், மகள் ஆகிய மூவரே இவ்வாறு கொலை செய்யப் பட்டதாகவும், இக்கொலை கடந்தபுதனிரவு இடம்பெற்றிருக்கக் கூடும் என்றும் தெகிவளைப் பொலிசார் கூறுகின்றனர்.

நேற்றுமுன்தினம் காலை குறித்த வீட்டிற்கு வேலைக்காரப் பெண் சென்ற சமயம் இவர்கள் கொலையுண்டிருப்பது தெரிய வந்தது.

## மத்திய கிழக்கில் பணிப்பெண்களாகச் சென்று துன்புறுத்தலால் அங்கவீனமுற்ற 29 பணிப்பெண்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

மத்திய கிழக்கில் சேவை யாற்றியபோது பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகி அங்கவீனமுற்ற 29 வீட்டுப் பணிப்பெண்கள் நேற்றுக் காலை கொழும்பு திரும்பினர்.

மத்திய கிழக்கு நாடுகளில் எஜமானர்களால் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு ஆளாகிய இப்பெண்கள் கைகள்கூட காயமடைந்துள்ள தாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு வந்த பெண்மணியொருவர் கருத்துத் தெரிவிக்கையில் தாம் தாக்கப்பட்டதாகவும் பின்னர் வேலைவாய்ப்பு முகவரிடம் அழைத்துச் சென்றதாகவும் அவர்கள் தங்களை வேறு நபர்களுக்கு விற்றதாகவும் கூறினர்.

# ரத்வத்தைக்கு பிணைகோரி உயர் நீதிமன்றத்தில் மனு

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த உட்பட உடத்தலவின்ன படுகொலை வழக்கின் எதிரிகளான 15 பேரையும் பிணையில் செல்ல அனுமதி வழங்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் 15 மேன் முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி படுகொலை வழக்கை விசாரணை செய்யும் மேல்நீதி மன்ற நீதிபதிகள் குழு கடந்த ஏப்பிரல் மாதம் 23 ஆம் திகதி தாக்கல் செய்த மேன்முறையீட்டு பிணை மனுவை ரத்துச் செய்தமை சட்டத்திற்கு விரோதமானது என்றும் இந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சனவரி மாதம் 21ஆம் திகதி முதல் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள உடத்தலவின்ன கொலை வழக்கின் சகல எதிரிகளையும் பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டும் என்றும் இந்த மனுக்களில் கோரப்பட்டுள்ளன.

# தமிழ்க் கைதிகளின் வழக்குகள் வட - கிழக்கிற்கு மாற்றப்படாது

## சிறில.சட்டமா அதிபர் அறிவிப்பு

தென்பகுதிச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் வழக்கு விசாரணைகள் வட-கிழக்குப் பகுதிகளுக்கு மாற்றப்படமாட்டாது என்று சிறிலங்காவின் சட்டமா அதிபர் கே. சி.கமலசபேசன் தெரிவித்துள்ளார்.

இவர்களின் வழக்கு விசாரணைகளை வட-கிழக்குப் பகுதிகளுக்கு இடம்மாற்ற சட்டமா அதிபர் தன்னைச் சந்தித்த தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரான அப்பாத்துரை விநாயகமூர்த்தியிடம் உறுதியளித்திருந்தார்.

சிறிலங்காப் படையினருக்கு தகவல் வழங்கும் உளவாளிகள் பலர் இனந்தெரியாதோரினால் சுட்டுக்கொல்லப்பட்டு வருவதினால் இவர்களுக்கு எதிரான சாட்சிகள் வட-கிழக்கிற்குச் செல்ல மறுத்து வருவதாக சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.


## 03ஆம் ஆண்டு நினைவாக...



# லெப். ஈழவாசன்

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி

(கதிரமலைப்பிள்ளை அருள்வண்ணன்)

*அளவெட்டி வடக்கு, அளவெட்டி, யாழ்ப்பாணம்.*

| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
| --- | --- |
| 04-09-1979 | 10-05-2000 |

ஓயாத அலைகள்-03 ஓங்கி அடித்த வேளையிலே 28-12-1999இல் உமையாள்புரத்தில் விழுப்புண்ணடைந்து சீரான நடை தளர்ந்த போதும் சீறிப்பாயும் புலியென யாழ். மண் மீட்டிட அரியாலைப் பகுதியில் நடந்த மோதலில் நாயகக் கனவுடன் சாவினைத் தழுவினாய்.

இவருடன் அன்று அதே இலட்சியத்திற்காக உயிர் நீத்த சக மாவீரர்களுக்கும் எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

நல்லூர்,
பூநகரி. (3187)

மா. கதிரமலைப்பிள்ளை.
குடும்பத்தினர்.

## சிந்தனைக்கு



தமிழ் மக்களாகிய நாம் ஒரு தேசியக் கட்டமைப்பைக் கொண்டவர்கள். வரலாற்று ரீதியாக நாம் ஒரு தேசியமாகவே வாழ்ந்து வந்தோம்; தேசியமாகவே வாழ்ந்து வருகின்றோம்; தேசியமாகவே வாழப் போகின்றோம்.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 10-05-2003

## தமிழ் மக்களுக்கு பயன்கிட்டவில்லை

சமாதானம் என்பதைப் பிரச்சாரப்படுத்தி கிடைக்கப்பெறும் நிதி உதவிகளைக் கொண்டு தென்னிலங்கையை வளர்ப்பதற்கு அரசாங்கம் முற்படுகின்றதே ஒழிய, எமது மக்களின் பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வு காண்பதற்கு எதையும் செய்யவில்லை என்ற தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் கூற்றுக்கள் முற்றிலும் சரியானதே.

யுத்தநிறுத்தம் அமுலுக்கு வந்து 14 மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் தமிழ் மக்களுக்கென அது கொண்டு வந்தது என்ன? என்றால் எதுவும் இல்லை என்றே கூறமுடியும். மாறாக தென்னிலங்கையிலிருந்து பெருந்தொகை குப்பை கூழங்கள் தமிழர் தாயகப் பகுதியில் குவிக்கப்பட்டதோடு, அவை விற்றுக் காசாக்கப்பட்டன என்பதே யதார்த்தமாய் நடைபெற்றது. வேறு விதமாகக் கூறுவதானால்,எஞ்சியிருந்த வளங்களையும் தெற்கிற்குக் கொண்டு போய்ச் சேர்த்தது என்றே கூற முடியும்.

மேலும் 14 மாதங்களுக்கு மேலாக நீடிக்கும் யுத்தநிறுத்தமானது மக்களுக்கு அமைதியானதும் பாதுகாப்பானதுமான வாழ்வைக் கொடுத்ததா எனின் அதுவும் இல்லை என்றே கூற வேண்டும். ஏனெனில் யுத்தநிறுத்த காலத்தில் கூட இராணுவம் அழுத்தத்தை மக்கள் மீது திணிக்காமல் இல்லை. அதாவது யுத்தநிறுத்த காலம் என்ற ரீதியில் தளர்வெதையும் அது மேற்கொள்ளவில்லை.

இது ஒருபுறம் இருக்க -சமாதானப் பேச்சுவார்த்தை மேசையில் விடுதலைப்புலிகள் இயக்கம் சமஷ்டி முறை மூலம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதைத் தாம் பரிசீலிக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்திருந்தனர். இது சிறிலங்கா அரசினாலும், சர்வதேச உலகினாலும் பெரும் வரவேற்பைப்பெற்ற விடயமாகவும் இருந்த போதிலும், அரசாங்கம் முன்னேற்றகரமான நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை.

மாறாகப் பேச்சுவார்த்தைகளின் போது காணப்பட்ட முன்னேற்றங்களை அடியொற்றி அரசாங்கமும், இராணுவமும் தளர்வுகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரிக்கைகள் விடுக்கப்படும் பட்சத்தில் அதற்கு அரசாங்கத் தரப்பில் தேசிய பாதுகாப்பு, பிரதேச ஒருமைப்பாடு என்ற ரீதியில் பதில் வருவதே வழமையாகும். அதாவது தேசிய பாதுகாப்பு, பிரதேச ஒருமைப்பாடு என்ற ரீதியில் தட்டிக்கழிக்கப்படுவதாகவே உள்ளது. அதாவது தேசிய பாதுகாப்பு, ஒருமைப்பாடு என்ற கோஷத்திற்குள் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை புதைத்து விடுபவர்களாகவே உள்ளனர்.

எடுத்துக்காட்டாக உயர் பாதுகாப்பு வலயத்தில் மீளக் குடியேற்றுதல், ஆழ்கடல் மீன்பிடி போன்றவற்றிற்கு இத்தகைய காரணிகளே கூறப்படுகின்றன. அதாவது மக்களின் இயல்பு வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான இந்நடவடிக்கைகள் சிறிலங்காவின் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலாகிவிடும். நாட்டின் இறைமை, ஒருமைப்பாட்டைப் பாதிப்பனவாகும் எனக் கூறி மறுக்கப்படுகின்றது.

அவ்வாறு இல்லாது விடில் சட்டச் சிக்கல்கள் உள்ளன எனக் கூறி பணிகள் மேற்கொள்ளப்படாமல் முடக்கப்பட்டு வருகின்றது. அதாவது, களுத்துறைச் சிறையில் உள்ள தமிழ் கைதிகள் விடுதலையிலிருந்து 'சீரானின' பணிக்கான நிதி வழங்கல் வரையில் சட்டச்சிக்கல்கள் உள்ளதென நடவடிக்கைகள் தாமதப்படுத்தப்படுபவையாகவுள்ளன.

ஆனால், புரிந்துணர்வு உடன்பாட்டின் அடிப்படையிலும், மனிதாபிமான அடிப்படையிலும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் ஆற்ற வேண்டிய பணிகள் ஏராளமாகவே உள்ளன. இத்தகைய பணிகளை நிறைவேற்றாமைக்கு அரசாங்கம் கூறும் காரணிகள், நொண்டிச் சாட்டுக்கள் போன்றவையாகவே உள்ளன.

இந்த வகையில் கடந்த 14 மாதச் சமாதானம் என்பது தமிழ் மக்களுக்கு விசேடமாக எதையுமே கொடுக்கவில்லை. இப் 14 மாத சமாதான காலத்தில் ஓரளவு நன்மைபயக்கத்தக்கதொன்றாக அமைந்தது பொருளாதாரத் தடையை அரசாங்கம் நீக்கியதே ஆகும். ஆனால் பொருளாதாரத் தடை நீக்கியும் பயன் என்ன என்ற கேள்வியே தமிழ் மக்கள் மத்தியில் நிலவுகின்றது. ஏனெனில் பொருளாதாரத் தடை நீக்கத்தின் பயனை அடையப் போதிய நிதி வளம் இல்லை.

ஆகையினால், பொருளாதாரத் தடை நீக்கத்தினால் கிடைக்கக் கூடிய வாய்ப்புக்களைக் கூடத் தமிழ் மக்களுக்கு கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்படவில்லை. ஆனால், தமிழ் மக்கள் மீது அழுத்தங்களைத் தொடர்ந்தும் பிரயோகிக்கும் வகையிலேயே அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. இந்நிலையில் தொடர்ந்தும் பேச்சுவார்த்தையில் பங்கேற்பதினால் என்ன பயன் என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

# புலிகளின் முற்றுகையிலிருந்து படையினரைக்காக்க இந்தியாவிடம் ஓடியபோது இறைமை எங்கே போனது?

## கதிர்காமரிடம் இரா. சம்பந்தன் கேள்வி



2000 ஆம் ஆண்டு குடாநாட்டைப் புலிகள் முற்றுகையிட்ட போது அங்கிருந்த 35 ஆயிரம் படையினரை மீட்பதற்கு புதுடில்லி அரசாங்கத்திடம் மன்றாடி நின்ற போது சிறிலங்காவின் இறைமை எங்கே சென்றது என கதிர்காமரின் உரை தொடர்பாக தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசின் இறைமை பற்றி கதிர்காமர் பெரிதாகக் கதைத்தார். களங்கப்படாததென்றும், களங்கப்பட்டுவிடக் கூடாதென்றும் விபரித்தார். சிறந்த ஆட்சி, சிறந்த நீதி, நிறைந்த செல்வச் செழிப்பு இருக்கும் போது தான் இறைமை குறித்துப் பெருமைப்பட வேண்டும்.

ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து அதன் மூலம் ஏ-9 பாதையைத் திறக்க முயற்சித்து ஆயிரக்கணக்கான படையினரைப் பறிகொடுத்து இறுதியில் தோல்வியைச் சந்தித்த போதும், புலிகள் யுத்தநிறுத்தத்தை அறிவித்த போதும், அதனை உதாசீனம் செய்து அக்கினிச் சுவாலையில் 1000 இராணுவத்தினரை இழந்த போதும் நாட்டின் இறைமைக்கு என்ன நடந்தது.

கதிர்காமர் இறைமை பற்றிக் கதைப்பது போலியானது அவர் கற்பனையில் கதைக்கிறார். தமிழ் மக்கள் ஒன்றும் கற்பனையான கோரிக்கைகளை முன்வைத்துப் போராடவில்லை. உண்மையாக உரிமைகளுக்காகவே போராடுகின்றனர். தந்தை செல்வா தலைமையில் முன்னெடுக்கப்பட்ட அஹிம்சா போராட்டம் அடக்கி ஒடுக்கப்பட்டதால்தான் ஆயுதப் போராட்டத்தை தமிழ் மக்கள் தேர்ந்தெடுத்தனர். தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறுவதற்கான ஒரு சூழ்நிலை ஏற்படும் வரை விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட முடியாது என மேலும் அவர் கூறினார்.

## -சிறீல.புலனாய்வுத் துறைக்கு-

# தகவல் கொடுப்போர் கொலை தொடர்பான அறிக்கை ரணிலிடம் சமர்ப்பிப்பு

இராணுவப் புலனாய்வுத் துறைக்குத் தகவல் கொடுப்போர் கொலை செய்யப்படுவது குறித்து ஆராய சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட குழு தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.

சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தலைமையில் அமைக்கப்பட்ட இக்குழுவில் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர், இராணுவத் தளபதி ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

புலனாய்வுத்துறைக்கு தகவல் கொடுப்போர் கொலை செய்யப்படுவதைத் தடுக்கும் முகமான சிபார்சுகளை இவர்கள் சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கல்வி நிர்வாக சேவையின் 1ம் வகுப்பு வெற்றிடங்கள் நிரப்பல்

(கொழும்பு)

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் முதலாம் வகுப்பு பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைப் பிரிவு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாகஅறிவிக்கப்பட்டிருக்கிறது.

நாடளாவிய ரீதியில் கல்வி அமைச்சுக்கள், மாகாணக் கல்வித் திணைக்களங்கள், வலயக் கல்வி அலுவலகங்கள் என்பவற்றில் இலங்கைக் கல்வி நிர்வாக சேவையின் முதலாம் வகுப்பு பதவிகளில் நிலவும் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளதாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மேலதிக செயலாளர் ரி.எம்.எம்.தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இதன்படி 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி வரை ஏற்பட்ட வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்காக தற்போது கல்வி நிர்வாக சேவையின் இரண்டாம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் சேவை மூப்பு அடிப்படையிலான அட்டவணையின் முன்னுரிமைப் பிரகாரம் முதலாம் வகுப்பிற்கு பதவி உயர்த்தப்படவுள்ளதாகவும் தென்னக்கோன் கூறியுள்ளார்.

இவ் உத்தியோகத்தர்களுக்கான நேர்முகப் பரீட்சை மே மாதம் முதல் வாரத்தில் பத்திரமுல்ல இசுறுபாயவில் அமைந்துள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைப் பிரிவு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகப்பரீட்சைக்கான கடிதங்கள் கிடைக்கப்பெற்ற உத்தியோகத்தர்கள் குறித்த தினங்களில் காலை 9.00 மணிக்கு உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# போக்குவரத்துச் சேவையின்மையால் மாணவர்கள், நோயாளிகள் சிரமம்

(ஒட்டுசுட்டான்)

தண்ணீரூற்று தட்டாமலை ஊடாக நெடுங்கேணி செல்லும் வீதியில் போக்குவரத்துச் சேவை இன்மையால் உயர்தர மாணவர்கள், நோயாளிகள் பெரும் சிரமப்படுகின்றனர். இவர்கள் நெடுங்கேணி செல்வதானால் ஐந்து கிலோ மீற்றர் தூரம் நடந்தே செல்கின்றனர்.

ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்துள்ள பழம்பாசி, தண்டுவான், கோடாலிகல், களிக்காடு மாமடு, தட்டாமலை, பெரிய இத்திமடு. கரடிப்பிலவு ஆகிய பகுதி மாணவர்களும் மக்களுமே நடந்துசெல்கின்றனர். (05)

# கிரிக்கெட் போட்டியில் காயமடையும் வீரர்களுக்கு மருத்துவக் காப்பீடு




கிரிக்கெட் போட்டிகளில் காயமடையும் வீரர்களுக்கு மருத்துவக் காப்பீட்டுத் தொகை வழங்கும் புதிய திட்டத்தை இந்திய கிரிக்கெட் வீரர்கள் சங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்திய கிரிக்கெட் வீரர்கள் சங்கம் இத்திட்டத்தைக் கொண்டுவந்துள்ளது. அதன்படி இந்திய அணிக்காக விளையாடும் ஒவ்வொரு வீரருக்கும் மருத்துவக் காப்பீட்டு அட்டை வழங்கப்படவுள்ளது.

இதன் மதிப்பு மூன்றரை இலட்சம் ரூபாவாகும். கல்கத்தாவில் நடைபெற்ற இது தொடர்பாக செய்தியாளர்கள் மத்தியில் பேசிய இந்திய அணித் தலைவர் கங்குலி, இத்திட்டத்தின் மூலம் வீரர்கள் மட்டுமன்றி அவரது குடும்பத்தினரும் உடல்நலம் பாதிக்கப்படும் போது, இந்தியாவின் எந்தவொரு மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும் என்று கூறியுள்ளார். இந்நிகழ்வில் இந்திய கிரிக்கெட் வீரர்கள் சங்கத்தின் செயலாளர் அருண்ராஜ், துணைத்தலைவர் ரகு சாஸ்திரி ஆகியோரும் கலந்து கொண்டுள்ளார்கள்.

# நெதர்லாந்தில் தாயக கலைஞர்களின்
# 'தாயக பரணி' சிறப்பு இசை நிகழ்வு

நெதர்லாந்தில் வேபர்வைக் நகரில் கடந்த ஞாயிறன்று 28 தாயகத்து கலைஞர்கள் பங்கு பற்றிய தாயக பரணி கலை இசை நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக இடம் பெற்றிருந்தது. இந்நிகழ்வில் 1000 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மாலை 4 மணியளவில் ஆரம்பித்த இந்நிகழ்வு மாவீரர்களிற்கான அகவணக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து தாயகத்திலிருந்து வந்திருந்த அனைத்து கலைஞர்களையும் வரவேற்று வரவேற்புரையை நெதர்லாந்து தமிழர் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் வழங்க தாயகத்து கலைஞர்களால் சோலே வயலின் இசை நிகழ்வு வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இயக்குனர் குயிலினியின் இயக்கத்தில் உருவாகிய உப்பில் உறைந்த உதிரங்கள் தமிழீழ திரைப் படத்தினதும் கவிஞர் நாவண்ணன் எழுதிய கரும்புலி காவியம் புத்தக வெளியீட்டு நிகழ்வும் இடம்பெற்றது. இவ் வெளியீட்டு நிகழ்வில் இயக்குனர் குயிலினி, கவிஞர் நாவண்ணன், நிதர்சனப் பொறுப்பாளர் சேரலாதன் ஆகியோரர் உரையாற்றினர். இவ் வெளியீடுகளின் சிறப்புப் பிரதிகளைமாவீரர்களின் பெற்றோர், சகோதரர் பெற்றனர்.

இயக்குனர் குயிலினி அவர்களுக்கும் கவிஞர் நாவண்ணன் அவர்களுக்கும் சிறப்பு கேடயங்கள் மாவீரர்களின் உடன்பிறந்தவர்களால் வழங்கப்பட்டு நெதர்லாந்து பணியகத்தால் கௌரவிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து இசைநிகழ்ச்சி நடைபெற்றது. அனைத்துக் கலைஞர்களுக்கும் சிறப்புப் பரிசில்கள் ஓயாத அலைகள் வரலாற்றுத் தாக்குதலில் கரிப்பட்டமுறிப்பில் வீரச்சாவடைந்த வீரவேங்கை விடுதலை அல்லது ரகுமதியின் தாயாரினால் வழங்கப்பட்டு நெதர்லாந்துப் பணியகத்தால் கௌரவிக்கப்பட்டனர் இறுதியாக - புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம் - என்ற இலட்சியப்பாடலை அனைத்து தாயகக் கலைஞர்களும் வழங்க மக்கள் கைதட்டி இரவு 9 மணியளவில் தாயக பரணி எழுச்சி கலை இசைநிகழ்ச்சி நிறைவு பெற்றது.



## யாழ். இராணுவத்...

### எண்ணிக்கையை அதிகரிப்பது புதிய யோசனை அல்ல

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் மேலும் நாடுகளைச் சேர்ப்பது என்ற யோசனை ஒன்றும் புதிதல்ல. கடந்த சில மாதங்களாகவே மற்றைய சிறிய ஐரோப்பிய நாடுகளில் இருந்த உறுப்பினர்களை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் சேர்க்க வேண்டும் என்ற விவாதங்கள் நடந்திருக்கின்றன. அதற்கு நோட்டிக் பகுதி நாடுகள் சிறிய நாடுகள் கண்காணிப்பாளர்களை அதிகரிப்பதற்கு தேவைப்படும் அளவுக்கு போதிய வசதி இல்லாதது என்பது தான் காரணம். கடந்த இரண்டு வாரங்களில் அரசியல்கட்சிகளிடம் இருந்து வந்த விமர்சனங்களுக்கு சதீஸ் நம்பியார் கருத்து தெரிவித்திருக்கின்றார் என்று நாம் கருதவில்லை. ஆனால் கடந்த இரண்டு வாரத்தில் இந்த அறிக்கையை தயாரிக்கவில்லை என்று தான் நான் நினைக்கிறேன். இவ்வறிக்கையை தயாரிக்கும் பணியில் கடந்த சில மாதங்களாகவே அவர் ஈடுபட்டுள்ளார்.

வெளிப்படையாகச் சொல்லப் போனால் முக்கியமான கவலை கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கையைக்கூட்ட வேண்டும் என்பதோ அல்லது கண்காணிப்புக் குழுவினரின் அதிகாரத்தைக் கூட்ட வேண்டும் என்பதோ அல்ல. இலங்கை அரசும் மேலும் குறிப்பாக விடுதலைப்புலிகளும் தங்களது தலைவர்கள் கைச்சாத்திட்ட போர்நிறுத்த உடன்பாட்டை மேலும் முறையாக கடைப்பிடிக்க வேண்டும் என்பது தான் இப்போது இருக்கும் கவலை என்று நான் நினைக்கிறேன் என்றார்.

### கூடுதல் அதிகாரம் தேவையானது தான்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகள் மீளாய்வு செய்யப்பட வேண்டும். வானிலிருந்து கண்காணிப்பை மேற்கொள்வதற்கு அதிகாரங்கள் தரப்பட வேண்டும் என்று நம்பியாரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்டபோது,

கூடுதல் கண்காணிப்பு என்பது ஓர் நல்ல யோசனைதான் அதைத்தான் வடக்கிலும் கிழக்கிலும் தினமும் செய்ய நாங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். வான்வழி கண்காணிப்புகள் என்ற ஜெனரல் நம்பியாரின் யோசனை குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு கருத்துச் சொல்வது சற்றுக் கடினம் ஆனால் ஒன்றைத் தெளிவாகச் சொல்ல முடியும். அரசும் விடுதலைப்புலிகளும் தான் போர்நிறுத்த உடன்பாட்டின் கீழ் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவை உருவாக்கினர் அவர்கள் விரும்பினால்.

இருதரப்பும் உடன்பட்டால் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவை மாற்றி அமைப்பதோ அல்லது அதன் செயற்பாடுகளில் மாற்றத்தைக் கொண்டு வருவதோ முடியும் என்றார் அவர்.

உயர் பாதுகாப்பு வலயம் மாற்றி அமைக்கப்படுவது குறித்து விடுதலைப்புலிகளின் நிலைகளிலும் அதற்கு சமமான அளவில் மாற்றி அமைப்பது நடந்தால் மாத்திரமே நடக்க முடியும் என்று கூறியிருப்பதாக நம்பியாரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதே என்று கேட்டபோது,

### எண்ணிக்கையை மட்டும் கணக்கில் எடுக்க முடியாது

இதேபோன்ற ஒரு யோசனையைத் தான் யாழ். மாவட்டத் தளபதி பொன்சேகா சனவரி முதலாம் திகதி முன்வைத்தார். இதில் நாம் கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால் இலங்கை அரசுப் படைகளும் விடுதலைப் புலிகளின் படைகளும் வெவ்வேறானவை. எனவே நீங்கள் படைகளின் எண்ணிக்கையை மட்டுமோ அல்லது பீரங்கிகளின் எண்ணிக்கையை மட்டுமோ கணக்கில் எடுக்க முடியாது. இருந்தாலும், ஏதாவது ஒரு சரி பார்க்கும் வழிமுறை என்பது நல்லதுதான் என்று நினைக்கின்றேன். இது பற்றித்தான் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர்கூட தெரிவித்துள்ளார். இதில் ஒருவிதமான கண்காணிப்பது என்ற ஒரு அம்சமும் அனுகூலமானதாகவே இருக்கும் என்று நினைக்கின்றேன் என்றார் பீற்றர் ஹெறாக்லண்ட்.

### புலிகளின் ஆட்லறிகளுக்கு படையினர் அச்சம்.

விடுதலைப்புலிகளின் நீண்ட தூரம் சென்று தாக்கும் ஆயுதங்கள் குறிப்பிடப்பட்ட இடத்தில் வெளிநாட்டவரின் கண்காணிப்பின் கீழ் வைக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டிருப்பது ஒரு சாத்தியமான நடவடிக்கையா? இதற்கு புலிகள் சம்மதிப்பார்களா? எனக் கேட்டதற்கு

எனக்கு இது பற்றி எதுவும் தெரியாது. நீங்கள் இது குறித்து புலிகளிடம்தான் கேட்க வேண்டும். ஆனால், ஒன்று சொல்ல வேண்டும். யாழ். உயர்பாதுகாப்பு வலயத்தின் அளவு என்பது நாளை தங்களுக்கு இருக்கும் அச்சுறுத்தல் எந்தளவிற்கு பெரியது என்பதுடன் நேரடியாகத்தொடர்புள்ளது என்று நான் நினைக்கின்றேன்.

எனவே உயர் பாதுகாப்பு வலயத்தின் அளவு என்பது விடுதலைப் புலிகளிடம் உள்ள நீண்ட தூரம் சென்று தாக்கவல்ல ஆயுதங்களின் வல்லமையுடன் நேரடியாகத் தொடர்பு உள்ள ஒன்றாகும். எனவேதான் இந்த வலயங்கள் இந்தளவு பெரியதாகவுள்ளன. ஏனென்றால், இராணுவம் புலிகளின் நீண்ட தூரம் சென்று தாக்கவல்ல ஆயுதங்கள் குறித்து அச்சப்படுகின்றது என்றார்.

## வட-கிழக்கு...

சிரான் அமைப்பின் கட்டமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும் எனவும், இது தொடர்பாக தமது செயலாளர் அடுத்த சில நாட்களில் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவர் எனவும் கூறியுள்ளார்.

சிரானின் செயற்திட்டம் குறித்து அவர் தெரிவிக்கையில்: இது தொடர்பாக ஆறாம் கட்டப் பேச்சு வார்த்தைகளில் கலந்துரையாடப்பட்டதாகவும், அத்துடன் இது தொடர்பான விவாதம் முடிந்துவிடவில்லையெனவும், அடுத்த கட்டப் பேச்சுவார்த்தையின் போது இவ் விவாதம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

வட-கிழக்கு நிவாரண நிதியை செயற்படுத்துவதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து கூறுகையில் இப் பிரச்சினையை உலக வங்கியின் கவனத்திற்குத் தான் கொண்டு சென்றுள்ளதாகவும், இது தொடர்பான போதிய உதவிகளை வழங்க வேண்டுமென சட்டமா அதிபருக்குத் தான் அறிவுறுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

வட-கிழக்கிற்கான அபிவிருத்திப் பணியில் புலிகளை ஓரம்கட்டும் எண்ணம் அரசிற்கு இல்லை என புலிகளின் அரசியல் ஆலோசகருக்கு எழுதியுள்ள கடிதத்தில் இதனைத் தான் தெளிவுபடுத்தியுள்ளதாகவும். அத்துடன் டோக்கியோ மாநாட்டில் சமர்ப்பிக்கவிருக்கும் வடகிழக்கிற்கான தேவை மதிப்பீடு புலிகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டதாகத் கூறியுள்ளார்.

## உயர் பாதுகாப்பு...

டுகளைக் கொண்டிருந்த நிலையில் இந்த விடயத்தில் மிகக் கவனமான முறையில் அணுகியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

முதற்கட்டமாக முகமாலை, நாகர்கோவில், சாவகச்சேரியின் தென்பகுதி, யாழ். கடற்கரை வீதி ஆகிய பிரதேசங்களில் உள்ள அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவது, அல்லது பரப்பளவைக் குறைப்பது தொடர்பாக கவனம் செலுத்த முடியும். பின்னர் பலாலி விமானத்தளம், காங்கேசன்துறைத் துறைமுகம், பருத்தித்துறைத் துறைமுகம் ஆகிய பிரதேசத்தைச் சூழவுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக கவனம் செலுத்த முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் செயற்திறனை அதிகரிக்கும் வகையில் அவர்களுக்கு கடலிலும் வான்வெளியிலும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வளங்களைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். அத்துடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு மேலதிக அதிகாரங்களை வழங்க வேண்டும்.

அரச படையினரின் அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றும் எந்தவொரு நடவடிக்கையும் விடுதலைப்புலிகளின் படை நிலைகளை அகற்றும் நடவடிக்கையுடன் பொருந்துவதாக அமைய வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கீழ் மட்டக் குழுவே இரண்டு தரப்பும் திருப்திப்பட்டுக் கொள்ளும் வகையில் இவை அமுல்படுத்தப் படுகின்றனவா என்பதை கண்காணிக்க உரிய கண்காணிப்பு நிறுவனம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்வது இரண்டு தரப்புக்கும் தேவையாக அமையும். அந்தக் கண்காணிப்பு நிறுவனம் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரோ அல்லது சர்வதேச பொலிஸ் மற்றும் படைக் கண்காணிப்பாளர்களைக் கொண்ட வேறு ஒரு அமைப்பாக இருக்க முடியும்.

விடுதலைப்புலிகளின் நீண்ட தூரத் தாக்குதல்கள் சிறிலங்கா ஆயுதப்படைத் தளபதிகளை குழப்புவதால் பெரிய பிரதேசம் ஒன்று அதியுயர் பாதுகாப்பு வலயமாக இருக்கின்றது.

எனவே விடுதலைப்புலிகள் தமது நீண்ட தூர தாக்குதல் ஆயுதங்களை சர்வதேச கண்காணிப்பாளர்களின் கீழ் உள்ள அடையாளப்படுத்தப்பட்ட ஒரு பிரதேசத்தில் வைக்க வேண்டுமென நம்பியார் யோசனை முன்வைத்துள்ளார்.

வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் எந்தவொரு பயிற்சி நடவடிக்கையோ, கூட்டுப் பயிற்சியோ மற்றைய தரப்பிற்கு அறிவிக்கப்பட்டு சர்வதேச கண்காணிப்பாளர்களின் பிரசன்னத்தோடு மட்டுமே நடைபெற வேண்டும்.

பலாலி விமானத்தளம், காங்கேசன்துறை துறைமுகம், பருத்தித்துறை துறைமுகம் என்பனவற்றைச் சூழவுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயத்தின் பரப்பளவைக் குறைக்க முடியும். அத்துடன் விடுதலைப்புலிகளின் திடீர் தாக்குதல்கள் இடம்பெறாது இருப்பதற்கான மேலதிக உத்தரவாதத்தை சிறிலங்கா படைத் தளபதிகளுக்கு வழங்கும் வகையில் சர்வதேச கண்காணிப்புக் குழுவினருக்கு வலயத்தின் எல்லைப்பகுதியில் இருந்து செயற்பட அலுவலகமும் தங்குமிட வசதிகளும் செய்துகொடுக்கலாம்.

தற்போது இருக்கும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அதிகாரங்கள் போதுமானது அல்ல என்று கருதும் பட்சத்தில் அந்தக் குழுவிற்கு மேலதிக அதிகாரங்களை வழங்க முடியும் என்றும், பல கண்காணிப்புக் குழுக்களை ஏற்படுத்துவதைவிட தற்போது நடைமுறையில் இருக்கும் குழுவை மேலும் சக்தி மிக்கதாக மாற்றுவது பெரிதும் பயன்படும் எனவும் சதீஸ் நம்பியார் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அரச படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நம்பிக்கையை கட்டியெழுப்புவது அவசியம் என்றும், அந்த நம்பிக்கையை கட்டியெழுப்பும் வகையில் எதிர்த் தரப்பினரின் அதிகாரப் பிரதேசத்தில் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் சதீஸ் நம்பியார் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத் தரப்பில் இருக்கும் ஆயுதங்கள் தொடர்பாக கண்காணிப்பதற்கு விடுதலைப் புலிகளுக்கும் அவகாசம் வழங்க இராணுவத்தினர் விருப்பம் தெரிவிக்கவில்லை. இதனால், சர்வதேச கண்காணிப்பாளர்கள் மூலம் இத்தகைய ஆயுதக் கண்காணிப்பை மேற்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி - யாழ்ப்பாணம் ஏ-9 வீதியூடாக இராணுவத்தினரை அழைத்து செல்வதற்கு இராணுவ அதிகாரிகள் விரும்புவதில்லை. இதற்கு தீர்வு காணும் வகையில் வெளிநாட்டு கண்காணிப்பாளர்களுடன் இராணுவத்தினருக்கு அந்த நெடுஞ்சாலையூடாக பயணிக்க அனுமதி வழங்கப்பட வேண்டும். இதற்கு ஏற்ற வகையில் கண்காணிப்பாளர்களின் அதிகாரங்களும் பலப்படுத்தப்படல் வேண்டும்.

இராணுவத்தினர் பயணம் செய்யும் அத்தகைய வாகனங்களை விடுதலைப் புலிகள் தடுத்து நிறுத்தக்கூடாது அவற்றை சோதனை செய்யக்கூடாது என்றும் சதீஸ் நம்பியார் தெரிவித்துள்ளார்.

சமாதான வழி முறைகளில் விடுதலைப் புலிகள் மிக முக்கிய அங்கமாக இருப்பார்கள் என்கின்ற யதார்த்தத்தை ஏற்றுக் கொள்வதற்கு பல மட்டங்களில் இருக்கும் சிறிலங்கா இராணுவத் தளபதிகளுக்கு பெரும் கடினமாக உள்ளது.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தற்போது அனுமதிக்கப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் அரசியல் பணி குறித்து அதிக கவலைகள் இருக்கின்றன. இவை மிகச்சரியாக வரையறுக்கப்பட்டு கண்காணிக்கப்பட வேண்டும் என நம்பியாரின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நம்பியாரின்..

ளைப் பகிரங்கப்படுத்தக்கூடாது என்று உயர் அதிகாரிகள் கருதுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## சர்வதேச...

இந்நிகழ்வில் அணித்தலைவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு இவ்வணியினர் நாளை முதல் கண்ணிவெடிகள் மற்றும் வெடிபொருட்கள் இனங்காணப்பட்ட பகுதிகளில் பணியில் ஈடுபடவுள்ளதோடு இதுவரையில் மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவில் 480 பணியாளர்களை பயிற்சியளித்து பணியில் ஈடுபடுத்தி வருகின்றது.

## பறந்து கொண்டு..

சென்றசிறிது நேரத்தில் விமானத்தின் பின்பகுதியில் இருந்த படிக்கட்டுக்கள் கொண்ட கதவு திடீரென திறந்து கொண்டது என ஹொங்கோ ராணுவ அதிகாரிகளை மேற்கோள் காட்டி செய்திகள் கூறுகின்றன. இதன்விளைவாக விமானத்தில் பயணித்த இராணுவத்தரப்பினர் மற்றும் பொதுமக்கள் காற்றின் வேகத்தில் விமானத்தில் இருந்து தூக்கி எறியப்பட்டனர். என்று தெரிவிக்கப்படுகிறது.

விமானத்தை இயக்கிய ரஷ்ய குழு இவ்விபத்தில் உயிர் தப்பியது. என்றும் அவர்களால் மீண்டும் தலைநகருக்கு விமானத்தை திரும்பிச் செலுத்திவர முடிந்தது என்றும் விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

NITM
கணினிப் பயிற்சி நிலையம்
புதிய பிரிவு ஆரம்பமாகிறது.
மல்லாவியில்:- 18.05.2003
புதுக்குடியிருப்பில்:- 12.05.2003
(சி-7869)
Dip in Msoffice 2000xp

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மே மாதம் 10ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.